JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 13 | இதழ்: 01 | மார்ச் | ஆண்டு சந்தா ₹100/



# தேற்றரவாளன்!

# INDEX


4 லட்சியம் நிறைவேறியது...

12 ஜெயம் கொடுக்கும் தேவன்!

20 குடும்ப எழுப்புதல்!

28 வேதாகமத்தில் பெண்கள்


**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!**

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" **என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.**

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா






# தலைவாசல்

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

இன்றைய சமுதாயம் தன்னிடம் உள்ள smart phoneயை நம்பி உலகத்தின் கடைமுனை மட்டும் பயமில்லாமல் பயணிக்கின்றனர். Google map இருந்தால் போதும் குக்கிராமத்திற்கு மட்டும் அல்ல குவைத் நாட்டுக்கு கூட கால்நடையாக போகலாம் என்பது பலரின் கருத்து. ஆனால் எத்தனை பேர் இதுபோன்ற கண்டுபிடிப்புகளையும், மனிதன் உருவாக்கின உபகரணத்தையும் பின்பற்றி வழி தவறி எத்தனை பேர் தங்கள் வாழ்க்கையே தொலைத்திருக்கிறார்கள். மேலும் பலர் அடிமைதனத்தில் சிக்கியிருக்கிறார்கள்.





பலருக்கு அவர்களுடைய மொபைல் தான் உற்ற துணையாகவும், நல்யோசனை நல்கும் நண்பனாகவும் இருக்கின்றது. ஆனால் இயேசு சொல்லிய உற்ற துணை, ஏற்ற நண்பன், நல்ல வழிகாட்டி, நம்மோடு ஒவ்வொரு நாளும் இருப்பவராகிய தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரே. ஆனால் இன்றைய வாலிப சமுதாயம், இந்த தேற்றரவாளனோடு இணையாமல், தங்களை தேற்றுவதற்கு பல உபகரணங்களையும், உலகப் பொருட்களையும் பயன்படுத்தி, அவற்றை சார்ந்து வாழ்ந்து உண்மையான அன்பையும், உறுதியான உறுதுணையாகிய தேற்றரவாளனை மறக்கின்றனர், ஒருசிலர் வெறுக்கின்றனர். மேலும் சில வாலிபர்கள் இன்றைய கலாச்சாரத்தைப் பார்த்து, நம்மோடு பேச, துணையாக இருக்க Robotக்கள் உண்டு என்ற virtual உலகில் வாழ்ந்து, தங்கள் வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இன்றைக்கு வாலிபர்களின் பிரச்சனையே, பாவம் மற்றும் பரிசுத்தமாக வாழ்வதுமே. இந்த தேற்றரவாளன் நம் வாழ்க்கையில் இருப்பாரானால் பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். நம்முடைய உற்ற துணை, நண்பன், நெருங்கி நண்பன் என்று பலரை சொல்லுவோம். ஆனால் நாம் தவறு செய்யும்போது நம் மனதை புண்படுத்தக் கூடாது என்பதற்காக ஒருநாளும் அவர்கள் நமக்கு சொல்வதில்லை. ஆனால் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் நம்மேல் மிகுந்த அக்கறையும், அன்பும் உள்ளவர் என்பதால் நம்மை எச்சரிப்பதும் மட்டுமின்றி, நாம் வழுவாமல் சீரான பாதையில் நாள்தோறும் செல்ல அடித்தளம் அமைக்கின்றார்.

**எனக்கன்பான வாலிப சமுதாயமே!**

**இந்த கடைசி கால எழுப்புதலில் உன்னுடைய ஐக்கியமும், ஆர்வமும், அசைக்க முடியாத உறுதியும், ஆழமான அன்பும், பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் மீது உண்டானால், அவர் பயன்படுத்தும் வல்லமையான பாத்திரமாக நீ மாற முடியும்.**

**அவர் உன்னை முத்திரை மோதிரமாக பயன்படுத்துவார்.
உன்னைபோல் உள்ள ஒவ்வொரு வாலிபனின் வாழ்விலும் உற்ற துணையாக, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் இருப்பாரானால்,
எழுப்புதல் அக்கினி எளிதில் பரவ செய்து
இயேசுவின் அன்பை அவனி எங்கும் ஏக்கத்தோடு எடுத்துரைக்க முடியும்!** ●

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

சாட்சி: ஜிஷ்யா

# லட்சியம் நிறைவேறியது...



**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, சிறு வயதிலேயே இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று, தினமும் ஜெபிக்கிற மகள், வாலிப வயதில் ஆண்டவரை விட்டு பின்மாற்றத்திற்குள் போன ஜினி, ஆண்டவரோடு தனது வாழ்க்கையை எப்படி புதுப்பித்துக் கொண்டார் என்பதை பற்றி அவர்களே நம்மோடு பகிர்ந்து கொள்வார்கள்.**

**ஹாய்... ஜினி... உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் சொல்லுங்களேன்?**

ஹாய்... அக்கா... எனது பெயர் ஜினி, நான் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயில் என்ற பகுதியில் பிறந்து வளர்ந்தேன். திரு. ஜான் நிஷன், திருமதி. செல்வ அமுதா தம்பதியருக்கு மூத்த மகளாக பிறந்தேன். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அவள் தற்போது கல்லூரியில் படித்து வருகிறாள். எனது அப்பா கிறிஸ்தவர், அம்மா இயேசுவை அறியாத குடும்பத்திலிருந்து வந்து இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் நான் கிறிஸ்தவ பாரம்பரியத்தின்படி வளர்க்கப்பட்டேன். சிறுவயதிலிருந்தே நான் தினமும் ஜெபம் செய்வேன், ஆலயத்துக்கு ஒழுங்காக செல்வேன். என் பெற்றோரும் கிறிஸ்தவ ஒழுங்கின்படி வளர்த்தார்கள். எங்களோடு எனது பாட்டியும் இருக்கிறார்கள். இதுதான் எனது அழகான குடும்பம்.



ஜினி தன் குடும்பத்துடன்

**சூப்பர்... அழகான குடும்பத்தைப் பற்றிச் சொன்னீர்கள்... உங்களது பள்ளி மற்றும் கல்லூரிப் பருவம் பற்றி சொல்லுங்களேன்?**

நான் பள்ளியில் படிக்கும் போது நன்றாகப் படிப்பேன். படித்து ஒரு IAS or H.Rஆக வேண்டுமென்பதே எனது லட்சியம். எனக்கு நடனம் போன்ற காரியங்களிலும் மிகுந்த ஆர்வம் உண்டு. பத்தாம் வகுப்பில் 489/500 மதிப்பெண்களும், 12ம் வகுப்பில் 1061/1100 மதிப்பெண்கள் பெற்று நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிப் பெற்றேன். எனது பெற்றோர் மிகவும் கண்டிப்புடனும் அன்புடனும் எங்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள். ஆகையால் என்னால் நன்றாகப் படிக்க முடிந்தது. என் லட்சியத்தை நிறைவேற்ற என் பெற்றோரும் எனக்கு உதவி செய்தார்கள்.

**சூப்பர்... நன்றாக படித்தீர்கள்.... இரட்சிப்பின் அனுபவத்தை பற்றி சொல்லுங்களேன்?**

எனது அம்மா கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். எனது அப்பா கிறிஸ்தவர். திருமணத்திற்கு பிறகு ஆலயத்திற்கு சென்று வருவார்கள். நான் மூன்றாம் வகுப்பு படிக்கும்போது, எனது தாயார் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படும் போது, ஜெபத்தின் மூலம் கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அதை பார்த்ததிலிருந்து இயேசு தான் உண்மையான தேவன் என்று இயேசுவை நேசித்தேன். அப்போதிலிருந்தே இயேசு தான் உயிருள்ள தேவன் என்று என் சக மாணவர்களுக்கு சொல்வேன். ஆண்டவரோடு எனக்கு மிகவும் அன்பு பெருகியது. நாளடைவில் அபிஷேகம் பெற வேண்டுமென்று சிறுவயதிலேயே ஜெபிப்பேன். ஆனால் நான் அப்போது

அபிஷேகிக்கப்படவில்லை. மிகவும் வாஞ்சையோடு தொடர்ந்து ஜெபித்து வந்தேன்.




**சூப்பர்... நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றீர்கள்... தொடர்ந்து கல்லூரி படிப்பை எப்படி படித்தீர்கள்? ஆண்டவரோடு உள்ள உறவில் வளர முடிந்ததா?**

சொல்றேன்... பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரி படிப்பிற்காக சென்னைக்கு சென்றேன். அங்கு கொஞ்ச நாட்கள் என்னுடைய வாழ்க்கை நன்றாக சென்றது. தவறாமல் தினமும் ஜெபம் செய்வேன். அதன் பிறகு திறந்து விடப்பட்ட கிளியைப் போல எனக்கு விருப்பமான காரியங்களைச் செய்ய ஆரம்பித்தேன். என் ஜெப வாழ்க்கை தடைபட்டது. ஜெபம் இல்லாததால் பரிசுத்தமில்லாத காரியங்கள் என் வாழ்க்கையில் வர ஆரம்பித்தது. ஒரு பாவம் இன்னொரு பாவத்தை செய்ய வைத்தது. பல அடிமைத்தனங்களுக்கும் இடம் கொடுத்தேன். Kpop groups (BTS, Monsta X, Blackpink, NCT....) (Korean POP).



இது போன்ற பல group-களை follow செய்து, அவர்கள் நடனங்களையும், பாடல்களையும் இடைவிடாமல் பார்க்கவும், கேட்கவும் ஆரம்பித்தேன். Korean Series-ஐயும் இரவு முழுவதும் தூங்காமல் விடியும் வரை பார்ப்பேன். இதனால் 3-4 வருடங்களாக காலை உணவு ஒழுங்காக சாப்பிடுவதில்லை. கல்லூரியில் இருந்து வந்ததும் செல்போனை எடுத்து பார்க்க ஆரம்பிப்பேன்.



இதுத் தவிர Instagram, Snapchat, Whatsapp போன்ற சமூக வலைத்தளங்களுக்கும் மிகவும் அடிமையாக இருந்தேன். செல் போனை unlock செய்தாலும், எனக்கே தெரியாமல் என் கை Instagram-க்குள் செல்லும் அளவிற்கு அடிமையாக இருந்தேன். Kpop group-ல் வரும் நபர்களை போன்று ஆடை அணிய ஆரம்பித்தேன். அவர்கள் பேரில் இருக்கும் பொருட்களை எல்லாம் வாங்கி வைத்துக் கொள்வேன். இப்படி மொபைலுக்கு அடிமையாக இருந்தேன். என் ஜெப வாழ்க்கை மிகவும் பின்தங்கி இருந்தது. அதனால் எனக்கும் ஆண்டவருக்கும் உள்ள உறவில் வளர முடியவில்லை.

**பல பாவக் காரியங்களில் அடிமைப் பட்டிருந்தீர்கள்... ஆண்டவரோடு உள்ள உறவில் வளர முடியவில்லை... சரி எப்போது, எப்படி ஆண்டவரோடு உள்ள உறவை வளர்த்துக் கொள்ள முடிந்தது?**

நான் 2016ம் ஆண்டு முதல் செல்போனுக்கு அடிமையாகி இருந்தேன். P.G. படித்து முடித்த பின்பு, H.R-க்கு படிக்க வேண்டுமென்று மாஸ்டர் டிகிரி படிக்க முடிவு செய்து சென்னையிலுள்ள கல்லூரியில் முதல் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் போது ஊரடங்கு வந்தது. அந்த நேரத்தில் கல்லூரிகள் மூடப்பட்டதால் நான் ஊருக்கு வந்தேன். வீட்டிற்கு வந்து பார்த்தால் என் குடும்பமே தமிழ் சீரியல் பார்ப்பதற்கு அடிமையாக இருந்தது. வேறு வழியில்லாமல் நானும் பார்ப்பேன். இந்த சூழ்நிலையில் தான் ஒருநாள் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியைப் பார்த்தோம். அந்நிகழ்ச்சி மூலமாக குடும்ப ஜெபம் செய்ய வேண்டுமென்று ஆண்டவர் பேசினார். உடனே நாங்கள் கீழ்ப்படிந்து குடும்ப ஜெபம் செய்ய ஆரம்பித்தோம். அதன்பிறகு தினமும் தனி ஜெபம் செய்ய ஆரம்பித்தேன். ஆண்டவர் பாவங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை கொடுத்தார். 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் Revival Igniter Camp இருக்கிறதை அறிந்து அதில் கலந்து கொண்டேன். அந்த முகாமில் கர்த்தர் என் வாழ்க்கையை தலைகீழாக மாற்றினார். என்னுடைய பாவங்களை ஒப்புக்கொடுத்து அழுது ஜெபித்தேன். எல்லா பாவப் பழக்கங்களிலிருந்தும் முற்றிலும் விடுதலை கொடுத்து, என்னை அபிஷேகித்து



யுத்த சேனையாய் தெரிந்து கொண்டார். என் பாவங்களை முற்றிலும் இயேசு மன்னித்து என்னை புதுசிருஷ்டியாக அபிஷேகித்து அனுப்பினார்.ஒரு காலத்தில் பிசாசைப் பார்த்து பயந்துக் கொண்டிருந்த என்னை, அவன் கிரியைகளை முடக்கவும், கட்டவும், அவன் தந்திரங்களை அறிந்து யுத்த ஜெபம் செய்யும்படியான கிருபையை ஆண்டவர் கொடுத்திருக்கிறார். இப்பொழுது தினமும் தேசத்திற்காக 2 முதல் 3 மணி நேரம் வரை ஜெபிக்கும் ஜெப ஆவியை கொடுத்திருக்கிறார். முகாமில் கலந்து கொண்டபின்பு என் வாழ்க்கையை அவருக்கு உகந்ததாக மாற்றினார்.

**சூப்பர்... ஆண்டவரோடு உறவை புதுப்பித்துக் கொண்டீர்கள்... உங்களது H.R கனவு நிறைவேறியதா?**

அந்த 3 நாள் முகாமில் ஒருவருக்கொருவர் என்ன தேவை என்று கேட்டு ஜெபிக்க சொன்னார்கள். நானும் என் வேலைக்காக ஜெபிக்க சொல்லி ஜெபித்தேன். கொஞ்ச நாட்களில் Interview-ல் கலந்து கொண்டு அதில் தேர்வு பெற்று வேலைக்கு சேர்ந்தேன். அந்தக் கம்பெனியில் மிகக் குறைந்த சம்பளமே எனக்கு கிடைத்தது. அதில் வேலை செய்து கொண்டிருக்கும் போதே, இயேசப்பா எனக்கு நல்ல சம்பளத்தில் வேலை வேண்டுமென்று என் குடும்ப சூழ்நிலைகளை சொல்லி ஜெபித்து, வேறு வேலைக்காக முயற்சி செய்தேன். நான் எதிர்பார்த்ததைவிட நல்ல சம்பளத்துடன் நல்ல கம்பெனியில் H.R பதவி கிடைத்து, பணி செய்து வருகிறேன்.

**உங்களது H.R கனவு நிறைவேறியது... ஆண்டவரோடு உள்ள உறவு எப்படி இருக்கிறது?**

மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. ஏனென்றால் முன்பெல்லாம், எப்பொழுதும் மொபைல் போனும் கையுமாகத் தான் இருப்பேன். ஆண்டவர் என்னை






அபிஷேகித்த பின்பு என்னுடைய ஜெப வாழ்க்கையில் பெரிய மாற்றம் வந்தது. காலையில் எழுந்ததும் ஆண்டவர் என்னோடு பேசுகிறார், நானும் அவரோடு பேசுகிறேன். எதற்காக ஜெபிக்க வேண்டுமென்று கர்த்தர் சொல்கிறார், அதற்காக ஜெபிக்கிறேன். நேரம் போகிறதே தெரியவில்லை. அவரோடு பேசுவது ஒரு இனிய அனுபவமாக இருக்கிறது. கைப்பிரதி கள் கொடுப்பது Prayer walk செய்வது என்று சிறிய சிறிய ஊழியங்களும் செய்து வருகிறேன். இன்னும் ஆண்டவருக்காக நிறைய செய்ய வேண்டுமென்று ஜெபித்து வருகிறேன். என்னை பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்ட இயேசுவுக்கு கடைசி மட்டும் உண்மையாக இருப்பேன்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

ஆண்டவரைவிட எதை அதிகமாக நேசித்தாலும் அது பாவம். பாவம் என்று தெரிந்தும் அதை தொடர்ந்து செய்வது இன்னும் பெரிய பாவம். மனந்திரும்பி ஒப்புக்கொடுத்தால் ஆண்டவரால் விடுதலை கொடுக்க முடியும். எந்த பாவமாக இருந்தாலும் நீங்களும் இயேசுவிடம் ஒப்புக் கொடுக்கும்போது, கர்த்தர் உங்களையும் எல்லா அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிப்பார். கர்த்தருக்கு உங்கள் இருதயத்தில் இடம் கொடுங்கள்.



**அன்பான வாலிபர்களே! மொபைல் போனுக்கு அடிமைப்பட்டிருந்த சகோதரி ஜினியோடு கர்த்தர் பேசி, அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கொடுத்து இன்றைக்கு தினமும் 3 மணி நேரம் ஜெபிக்கும் ஒரு யுத்த சேனையாக மாற்றியிருக்கிறார். நீங்களும் ஏதோ ஒரு பாவத்திற்கு அடிமைப்பட்டிருப்பீர்களானால் மனந்திரும்பி இயேசுவண்டை வாருங்கள். உங்களையும் ஒரு சேனையாக எழுப்பி எழுப்புதலில் பயன்படுத்துவார்! நீங்கள் ஆயத்தமா?** ●

# Spread the Revival Fire

Revival IGNITERS

## EVERY 1ST SUNDAY
(6th March)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center,
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center,
9442885315

**SANKARANKOIL (3PM -5PM)**
Gethsamane Prayer Center
8344949555 | 9750955548

## EVERY 2ND SATURDAY
(12th March)

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY
(13th March)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School,
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre,
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM - 5.30 PM)**
St. Paul's Matriculation School,
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center,
9750955548 | 9976766422

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School,
Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Gethsamane Prayer Center
9677858766 | 9442906567

## EVERY 3RD SUNDAY
(20th March)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center,
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
9488475315

**JEBAMALAI (2PM)**
Keelamathapuram,
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI : (3-:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School,
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center,
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsamane Prayer Centre,
9500283179 | 9442885315

## EVERY 4TH SATURDAY
(26th March)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
9788788512

## EVERY 4TH SUNDAY
(27th March)

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,
9750722000

**MUMBAI (5PM - 8PM)**
1st Sunday – Dharavi
2nd Sunday – Bhandup
3rd Sunday – Malad
9004882470




நான் ஒரு மருத்துவமனையில் OT-யில் (Operation theatre) ஒரு முக்கியமான பிரிவில் இருக்கிறேன். நான் கிறிஸ்துவை அறிந்து, தேவனுக்காக சபையில் சிறுவர் ஊழியமும் செய்கிறேன். என்னுடன் வேலை பார்க்கும் இயேசுவை அறியாத நண்பரோடு ஒரு நட்பு ஏற்பட்டது. நாளடைவில் சகஜமாக பேச ஆரம்பித்தோம் தற்பொழுது என் திருமணத்திற்கு பேச்சு வார்த்தை நடக்கின்றது. ஆனால் என் மனம் அந்த நபரையே யோசிக்கின்றது. என் பெற்றோரிடம் அந்த நபரை சொன்னபோது, முதலில் முடியாது என்று கூறின பெற்றோர், பிறகு என் விருப்பம் போல நடக்கட்டும் என்று சொல்லி விட்டார்கள். அவருக்கு இயேசுவைப் பற்றி சொல்லி, அவரும் கிறிஸ்தவ முறையில் திருமணம் செய்ய ஒப்புக்கொண்டு சபைக்கு வர ஆரம்பித்தார். ஞானஸ்நானம் எடுக்கவும் தயாராக இருக்கிறார். இந்நிலையில் என்னோடு பணிபுரியும் சக தோழி என்னிடம் கேட்ட கேள்விகள் என்னை நிலைகுலைய வைத்து விட்டது. **ஏஞ்சல், இந்த திருமணத்திற்கு இயேசப்பா சம்மதித்தாரா? இயேசப்பாவின் பரிபூரண சித்தத்தை, நீ அறிந்துக் கொண்டாயா? இந்த திருமணம் கர்த்தரால் தான் வந்தது என்று உன்னால் ஆணித்தரமாக சொல்ல முடியுமா?** என்று என் தோழி கேட்ட இந்த மூன்று கேள்விக்கும் என்னால் பதில் சொல்ல தெரியவில்லை மிகவும் குழம்பி போயியுள்ளேன். நான் ஒரு தவறான முடிவு எடுத்துவிட கூடாது, எனக்கு உதவி செய்யுங்கள்.

- ஏஞ்சல், பாண்டிச்சேரி.

அன்பு சகோதரி ஏஞ்சல்! உங்களின் குழப்பமும், பதட்டமும் எனக்கு நன்கு புரிகின்றது. தேவன் உங்களுக்கு தந்த நல்ல தோழிக்காக நான் ஆண்டவரை துதிக்கிறேன். ஏஞ்சல், ஏன் இந்த மூன்று கேள்விக்கும் உங்களால் பதில் சொல்ல முடியவில்லை? நீங்களும் ஜெபிக்கின்ற மகள் தான், கண்டிப்பாக ஜெபித்திருப்பீர்கள். அப்படி இருந்தும் ஏன் இந்த வேண்டாத குழப்பம்? ஏன் தவறான முடிவு எடுத்துவிட கூடாது என்று யோசிக்கிறீர்கள்? ஏஞ்சல்! உங்களுக்கும் தேவனுக்கும் சரியான ஒரு உறவு அல்லது ஐக்கியம் இருந்தால், இப்படிப்பட்ட கேள்விக்கு உடனே பதில் சொல்லி உங்களின் தோழியின் வாயை மூடியிருப்பீர்கள்.

### உங்கள் தோழியின் முதல் கேள்வி இந்த திருமணத்திற்கு இயேசப்பா சம்மதித்தாரா?




நீங்கள் ஜெபிக்கின்ற சகோதரி என்பதால் கண்டிப்பாக ஜெபித்திருப்பீர்கள். இயேசப்பா என்ன பதில் சொன்னார்? Yes என்று சொல்லியிருந்தால் பிரச்சனையில்லை. ஒரு வேளை No என்று சொல்லியிருக்கலாம் அல்லது Wait என்ற Signal கிடைத்திருக்கலாம். ஆனால் கர்த்தர் தன்னுடைய வசனத்திற்கு நேர்மாறாக ஒரு நாளும் பேச மாட்டார். ஒரு அந்நிய நுகத்தோடு பிணைக்கப்படாதிருப்பீர்களாக என்று சொல்லி விட்டு, நாம் அழுது, புரண்டு ஜெபிப்பதாலும், உபவாசித்து அவர் இருதயத்தை உருக செய்வதாலும் தன் வார்த்தைக்கு மாறாக செயல்பட மாட்டார்.

மேலும், நீங்கள் ஜெபிகின்ற சகோதரி, ஊழியம் செய்கின்ற மகள், எனவே உங்களின் வருங்கால கணவருக்காக நிச்சயம் ஜெபித்திருப்பீர்கள். நல்ல ஜெபிக்கின்ற கணவன் வேண்டும், என்னோடு சேர்ந்து ஊழியம் செய்து, என்னை ஊழியத்தில் உற்சாகப்படுத்த வேண்டும். நாங்கள் குடும்பமாக, தேவனுக்காக சாட்சியாய் வாழ்ந்து அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டும் என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஒருவேளை இப்படிப்பட்ட எதிர்பார்ப்போ அல்லது ஜெபக்குறிப்போ இல்லை என்றால், உங்களுக்கு வரும் Proposal-க்கு எப்படி ஜெபித்து பதில் சொல்ல முடியும்?



ஏஞ்சல், இப்படிப்பட்ட ஒரு எதிர்பார்ப்பு இருந்தால் தான் உங்களுக்கு வரும் Proposal-யை, உங்களால் நிதானிக்க முடியும். சரியான எதிர்பார்போ, அல்லது எதிர்கால கணவருக்காக சரியாக ஜெபிக்கவில்லை என்றால், எந்த ஒரு Proposal-க்கு Yes சொல்லும் வாய்ப்பு உண்டு. தவறான முடிவு எடுக்கும் ஆபத்தும் உண்டு.

**இரண்டாவது கேள்வி, இயேசப்பாவின் பரிபூரண சித்தத்தை அறிந்துக் கொண்டாயா?**

தேவ சித்தம் உள்ளதால் தான், இவரை என் வாழ்க்கையில் தேவன் அனுமதித்தார், இல்லை யென்றால் இவரை நான் சந்தித்திருக்கவோ அல்லது இயேசுவை அவருக்கு சொல்ல வாய்ப்போ கிடைத்திருக்காது என்று அநேக நேரம் பலர் யோசிப்பது உண்டு.

சரி, நீங்கள் சொல்வது போல அவருக்கு இயேசுவை அறிவித்தீர்கள் நல்லது, ஆனால் அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சி என்ன? என்று உங்களால் சொல்ல முடியுமா? அவர் இயேசுவை அறிந்திருக்கலாம், உங்கள் மேல் உள்ள அன்பால் சபைக்கு வரலாம், ஆனால் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை கட்டியெழுப்ப போதுமான ஆவிக்குரிய வளர்ச்சி உண்டா?

இன்றைக்கு கணவன், மனைவி இருவரும் ஜெபிக்கிற வீட்டிலேயே அனுதினம் வரும் சவால்களை சந்திக்க முடியாமல் திணறுகிறார்கள். நீங்கள் நேசிக்கும் நபரின் ஆவிக்குரிய வளர்ச்சியை குறித்து உங்களுக்கு தெரியுமா? நீங்கள் ஜெபிக்கலாம், சிறுவர் ஊழியம் செய்யலாம். ஆனால் அந்த நபரின் நிலை? அவரை பொறுத்தவரை அவர் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு சிறு குழந்தையைப் போல உள்ளார். நீங்கள் ஜெபம், அபிஷேகம், ஊழியம், ஆத்துமபாரம் போன்று சற்று உயர்ந்த நிலையில் உள்ளீர்கள். இப்படி சம நிலையில் இல்லாத, ஒருவரை திருமணம் செய்தால் எப்படி கிறிஸ்தவக் குடும்பத்தை கட்டி எழுப்ப முடியும்? இப்படி ஆவிக்குரிய வாழ்வில் சிறு பிள்ளையைப் போல் இருக்கும் ஒருவரை தேவன் உங்களுக்கு துணையாக தருவது அவருடைய சித்தமாக இருக்குமா? என்று யோசித்து பாருங்கள்!



அப்படியே ஆம் என்றால், நீங்கள் உங்கள் திருமண வாழ்வில் பல தியாகங்களை செய்ய வேண்டியதாய் இருக்கும். எடுத்துக்காட்டாக, வயலில் உழும்போது ஒரு பக்கம் ஒரு கன்று குட்டியும், ஒரு பக்கம் காளையையும் கட்டமாட்டார்கள். அப்படி கட்டினால் வயலில் உழுவதற்கு பயன்படாது. எனவே இந்த திருமணம் தேவனுடைய பரிபூரண சித்தமாயிருக்குமா? என்று நீங்களே நிதானியுங்கள்.

**மூன்றாவது கேள்வி, இந்த திருமணம் கர்த்தரால் தான் வந்தது என்று ஆணித்தரமாக சொல்ல முடியுமா?**

ஏஞ்சல்! நீங்கள் திருமணம் செய்ய விரும்பும் நபர், முதலில் உங்களின் நண்பராக இருந்தார். எனவே பல உதவிகளை செய்திருக்கலாம். கஷ்டமான சூழ்நிலைகளில் யாருமே இல்லாத நேரத்தில் உங்களின் குடும்பத்திற்கோ, உங்களுக்கோ ஒரு பெரும் ஆதரவாக இருந்திருக்கக் கூடும். அப்படி இல்லையென்றால் உங்கள் நட்பு, நேசமாக மாற வாய்ப்பே இல்லை.



எனவே உங்களின் வாழ்க்கையில் அவரை சந்தித்தது, அவருக்க இயேசுவை அறிமுகப்படுத்தியது எல்லாமே தேவ செயலாக உங்களுக்கு தோன்றலாம். ஆனால் மறுபக்கம், உங்களின் வாழ்க்கையில் தேவைகள் வந்த போது, ஒரு உதவி செய்யும் நபராக தேவன் அவரை அனுமதித்திருக்கலாம். அதன் மூலம் தேவ அன்பை அவருக்கு நீங்கள் அறிமுகப்படுத்தியிருக்கலாம். நாம் வேதத்தில் பார்ப்பது போல நமக்கு உதவி செய்ய பணிவிடை ஆவிகளை தேவன் அனுப்புவது நமக்கு உதவி செய்யவே அன்றி, அவர்களையே வாழ்க்கைத் துணையாக தேர்ந்தெடுப்பதற்காக அல்ல என்பதை அறிய வேண்டும். அநேகரை தேவன் நம் வாழ்க்கையில் சில நேரம், சில காலம் உதவிக்காகவோ, நம்மை உயர்த்துவதற்காகவோ, உருவாக்கப்படுவதற்காகவோ அனுமதிக்கலாம். ஆனால் உதவியவர்களே உற்ற துணை என்று தீர்மானித்து விட முடியாது.

எனவே உங்கள் தோழியின் மூன்று கேள்விகளை நீங்கள் சற்று ஆழமாக சிந்தித்தால், நீங்களே தெளிவாக தீர்மானம் எடுக்க முடியும்.

- ஒருவேளை இல்லை, இவரைதான் திருமணம் செய்வேன், நான் பழகிவிட்டேன், மறப்பதோ, விட்டு விடுவதோ கடினம் என்று யோசித்தால், திருமணத்திற்கு பிறகு அதற்காக கசப்பான விலைக் கிரயத்தை செலுத்திதான் ஆக வேண்டும்.



- இல்லை எனக்கு நன்கு புரிந்து விட்டது, நான் அவரை மாத்திரம் திருமணம் செய்யவில்லை, அந்த முழு குடும்பத்திற்கு மருமகளாக செல்வதால் பல பின் விளைவுகள் practical Difficulties உண்டு என்பதை உணர்ந்து கொண்டீர்கள் என்றால், நல்ல முடிவு எடுக்க முயலுங்கள்.

- ஏஞ்சல்! உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் எந்த தீர்மானத்தையும் மாற்றி அமைக்கலாம். ஆனால் திருமணம் என்ற உறவில் சரியாக தீர்மானித்து முடிவு எடுக்கவில்லை என்றால், வாழ்நாள் முழுவதும் கண்ணீராகவோ, வேதனையாகவோ மாற வாய்ப்பு உண்டு. ஜெபித்து செயல்படுங்கள் ●

முகப்பு செய்தி: சதீஷ்

# தேற்றரவாளன்!



வாழ்நாட்கள் முழுவதிலும் ஆற்றல் நிறைந்த பருவமாகவும், எதையும் சாதிக்க துடிக்கும் துணிவு நிறைந்த பருவமாக இருப்பது நீங்கள் இருக்கும் இந்த வாலிப பருவமே. வாலிப பருவம் என்பது வானத்தை தொட்டுவிட துடிக்கும் துடிப்பான பருவம். அந்தப் பருவத்தில் பறக்கத் தோன்றும், எதையும் வேகமாக செய்ய தோன்றும், இவை அனைத்துமே வாலிபர்களின் ஆற்றலை குறிக்கிறது. ஒரு காரியத்தை செய்து முடிக்க உற்சாகமாக ஆரம்பிக்கும் வாலிபர்கள் சில நாட்களுக்குள் காணாமல் போய் விடுகிறார்கள்? அதற்கு மிக முக்கியமான காரணம் சோர்வு. இன்றைக்கு அநேக வாலிபர்களின் உள்ளத்தில் இருக்கும் முக்கிய மான கேள்வி என்னவென்றால், "நான் அடுத்து என்ன செய்வது?" தன்னை சுற்றி நடக்கும் சூழ்நிலை மாற்றம், வாழ்வின் தோல்வி, இதனால் வாலிபர்களில் அநேகர் சோர்ந்து போய் முடங்கி போய் விட்டனர். ஒருவேளை நீங்கள்கூட உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வி, ஏமாற்றம், எதிர்காலத்தை குறித்த பயத்தோடு சோர்ந்து போய் இருப்பீர்களானால், உங்களை பெலப்படுத்தும்படி பிதாவாகிய தேவன் தேற்றரவாளனை அனுப்பி உள்ளார். **"சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்"** (ஏசாயா 40:29).





## யார் இந்த தேற்றரவாளன்?

பிதாவாகிய தேவனிடமிருந்து இயேசு கிறிஸ்து மூலமாக நம்மோடு வாசம் செய்யும்படி வந்து இருப்பவர்தான் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன். ஒரு குழந்தை என்னதான் அப்பாவின் பிள்ளையாக இருந்தாலும், அப்பாவோடே விளையாடினாலும், தனக்கு ஒரு பெலவீனம் வரும்போது அம்மாவைத்தான் தேடும், தாயினுடைய அன்பான அரவணைப்பும், தொடுதலும் ஒரு குழந்தைக்கு ஆறுதலைத் தரும். ஆண்டவர் பல இடங்களில் தன்னை தாயாகவே காண்பிக்கிறார். தாவீதின் தகப்பனாகிய ஈசாய் தன்னுடைய எட்டு குமாரரில் தாவீதைத் தவிர, மற்ற எல்லோரையும் உயர்ந்த ஸ்தானத்துக்கு செல்லும் அளவிற்கு அவர்களை நன்றாக படிக்க வைத்து இஸ்ரவேலின் இராணுவத்தில் சேர்த்தார். ஆனால் தாவீதையோ எல்லோராலும் அற்பமாய் எண்ணப்படுகிற ஆடு மேய்க்கிற தொழிலுக்கு அனுப்பினார். இதுமட்டுமின்றி தாவீது தன்னுடைய சொந்த தகப்பனாலும், சகோதரர்களாலும் வெறுக்கப்பட்டவராகவே இருந்தார். தாண் முதல் பெயர்செபா வரை பேரும் புகழும் பெற்ற சாமுவேல் தீர்க்கதரிசி, அவருடைய சொந்த வீட்டுக்கு வருவதை மறைக்கும் அளவிற்கு தாவீது தன் குடும்பத்தால் வெறுக்கப்பட்டார். ஒருவேளை தாவீதுடைய தாயார் கூட தாவீதை கவனிக்காமல் விட்டு இருக்கலாம் அல்லது ஒரு தாய் எனக்கு இருந்திருந்தால் இந்த நிலைமை எனக்கு வந்து இருக்குமோ என்று தாவீது யோசித்து இருக்கலாம்! ஆனால் இவர் நம்பிய ஆண்டவர் அவரை கைவிடவும் இல்லை, வெறுக்கவும் இல்லை. குடும்பத்தால் வெறுக்கப்பட்டு தன்னந்தனியாக வனாந்திரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டு இருக்கும் போது ஆண்டவர் அவரை நிச்சயமாக தேற்றி இருப்பார். அதனால் தான் தாவீது தன்னுடைய அனுபவத்தை சொல்கிறார். **"என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்"** (சங்கீதம் 27:10) என்றார்.



இதை வாசித்துக் கொண்டு இருக்கும் நீங்கள்கூட, உங்கள் உடன்பிறந்தவர்களால், சொந்த உறவுகளால் வெறுக்கப்பட்டு தாவீதைப் போல புறக்கணிக் கப்பட்டு என்னை தேற்றவும், ஆறுதல் சொல்லவும் ஆளே இல் லை என்று, பல நாட்களாக ஆறுதலான வார்த்தைகளுக்காக உங்கள் இருதயம் ஏங்கி தவிக்கலாம். **"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்..."** (ஏசாயா 66:13) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பார்த்து சொல்கிறார்.



சில நேரங்களில், பத்து மாதங்கள் சுமந்து பெற்றடுத்த தாய்கூட நம்மை மறந்து போய் இருக்கலாம். ஆனால் ஆண்டவர் நம்மை ஒருபோதும் மறப்பதில்லை. **"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை"** (ஏசாயா 49:15) என்று கர்த்தர் சொல்கிறார். தரிசனத்தை நோக்கி ஓடிக்கொண்டு இருந்த யோசேப்பின் வாழ்க்கையில் ஏராளமான ஏமாற்றங்களும், வெறுப்புகளும், பாடுகளும், அவமானங்களும் வந்தன. யோசேப்பிடமிருந்து நன்மையைப் பெற்ற மனிதர்கள்கூட யோசேப்பிற்கு உதவி செய்ய முடியாத நிலைமைக்கு அவர் வந்திருப்பார், தள்ளப்பட்டார். இவை எல்லாவற்றையும் எப்படி யோசேப்பு கடந்து வந்திருப்பார்? அவருக்கு சோர்வு வந்து இருக்காதா? என்று தானே யோசிக்கிறீர்கள். சோர்வு நிச்சயம் வந்து இருக்கும். ஆனால் யோசேப்போடு இருந்த கர்த்தர் அவரைத் தேற்றினார். அதனால்தான், அவர் தன்னுடைய வாழ்க்கையில் எத்தனைப் போராட்டங்கள் வந்தாலும், அவை எல்லாவற்றையும் தாண்டி தரிசனத்தை அடைய முடிந்தது.



உலகம் முழுவதும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல வேண்டிய சீஷர்கள் இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பின் சோர்ந்து போய் விட்டார்கள். சோர்ந்து போன சீஷர்களை பெலப்படுத்தவும், இவர்களுக்கான தரிசனத்தை தெளிவுப்படுத்தவும் 40 நாட்கள் இயேசு அவர்களுக்கு தரிசனமாகி அவர்களை உற்சாகப்படுத்தினார். **"அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக் கிறவராகக் காண்பித்தார்" (அப். 1:3).**

*எனக்கன்பான வாலிப உள்ளங்களே! இன்றைய உலகத்தில் வாழும் அநேக வாலிபர்கள் தாங்கள் வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றம், தோல்வி போன்றவற்றால் அன்பு, அரவணைப்பு இல்லாமல் சோர்ந்து போய் தங்களுடைய வாழ்க்கையில் முடங்கி போய் விடுகிறீர்கள். ஆனால் நீங்கள் அவர்களை போல அல்ல, சோர்ந்து போகும் நேரத்தில் எல்லாம் உங்களை ஒரு தாய் போல தேற்றவும், ஆறுதல்படுத்தவும், "...என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் (பிதாவாகிய தேவன்) உங்களுக்குத் தந்தருளுவார்" (யோவான் 14:16) என்ற வேத வாக்கியத்தின்படி பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் உங்களுக்குள் இருந்து உங்களை பெலப்படுத்தி ஆற்றி தேற்றுவார். நீங்கள் எந்த சூழ்நிலையிலும் சோர்ந்து போகாமல் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனோடு இணைந்து உங்கள் தரிசனத்தை நோக்கி ஓடுங்கள்! ஜெயம் பெறுவீர்கள்!* ●


இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்

Sathiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL


சத்தியம் TV சனிக்கிழமை 6:30am

7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!



9750955547





செய்தி: சகோ. மோகன் சி. லாசரஸ்

# ஜெயம் கொடுக்கும் தேவன்!

**“...பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்’’** (யாத். 14:13,14). இன்றைக்கு காண்கிற பிரச்சனையை, பயத்தை, வியாதியை, போராட்டத்தை இனி என்றைக்கும் நீங்கள் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மா இருப்பீர்கள் என்று சொல்கிறார்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தில் 430 வருடம் அடிமைகளாக சிறைபிடிக்கப்பட்டு விட்டார்கள். யோசேப்பின் காலத்தில் குடியேறினவர்கள் பெரும் திரளாய் பெருகி விட்டார்கள். எபிரெயர்கள், இவர்களை அடிமையாக்கி வேலை வாங்கிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் எவ்வளவு நாள் அடிமைத்தனத்தில் இருப்பது, எங்களுக்கு விடுதலை வேண்டும் என்று தேவனை நோக்கி கதறிக் கொண்டிருந்தார்கள். ஜனங்களின் கதறுதலை தேவன் கேட்டு, மோசேயை அனுப்பி அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுதலையாக்கி, செங்கடலில் பாளையம் இறங்கும்படி செய்தார். இவ்வளவு காலம் அடிமைத்தனத்தில் இருந்த நாம் விடுதலை அடைந்தோம் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் போது, திடீரென்று இரதத்தின் இரைச்சல், குதிரைகளின் இரைச்சல் கேட்கிறது திரும்பி பார்த்தால், பார்வோன் தன்னுடைய சேனைகளோடும் வந்துக் கொண்டிருக்கிறது. **“பிரதானமான அறுநூறு இரதங்களையும், எகிப்திலுள்ள மற்ற சகல இரதங்களையும், அவைகள் எல்லாவற்றிற்கும் அதிபதிகளான வீரரையும் கூட்டிக்கொண்டு போனான்”** (யாத். 14:7). எகிப்தின் இரதப்படை வருகிறது என்றால் எல்லாரும் பயந்து நடுங்குவார்கள். 430 வருடம் அடிமைகளாக இருந்தவர்கள். இவர்களுக்கு யுத்தம் பண்ணி பழக்கமே கிடையாது. வாள் எடுத்து சண்டைப் போடத் தெரியாது. பார்வோன் தன்னுடைய பெரிய இரதப்படையயோடு, குதிரைப்படையோடு வருகிறான். **“பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும்**



**பயந்தார்கள்;...''** (யாத். 14:10). பார்வோனுடைய சேனை வருகிறது என்று முதலாவது அவர்கள் பயந்தார்கள். முதலில் பயந்தவர்கள் ஒரு நல்ல காரியம் செய்தார்கள். **"...அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்''** (யாத். 14:10). பயப்படுகிற சூழ்நிலை வந்தால் கர்த்தரை நோக்கி கூப்பிட வேண்டும். அவர்தான் உதவி செய்கிறவர்,



அவர்தான் விடுதலைக் கொடுக்கிறவர், அவர்தான் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே கொண்டு வந்தவர். அவரை நோக்கிக் கூப்பிட்டால் இரட்சிப்பு, உங்களுக்கு பாதுகாப்பு, உங்களுக்கு ஜெயம், உங்களை வெற்றியின் பாதையில் நடத்துவார். நீங்கள் கூப்பிடுங்கள் விடுதலை தருவேன் என்று சொல்கிறார்.

அவர்கள் இன்னொரு பொல்லாத காரியத்தையும் செய்தார்கள். **"அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலைசெய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப் பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்''** (யாத். 14:11,12) இஸ்ரவேல் மக்களைக் குறித்து தேவனுக்கு கோபம் உண்டாக்கின பாவம் இந்த முறுமுறுப்பு. இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள், முறுமுறுக்கிற ஜனங்கள் என்று கர்த்தர் கோபத்தோடு பேசுகிறார். இந்த முறுமுறுப்பு தேவனை மிகவும் துக்கப்படுத்துகிற ஒரு பாவம்.


எங்களை எகிப்திலே விட்டு விட்டிருக்கலாம், எதற்கு வனாந்தரத்திற்கு கூப்பிட்டு வந்தீர்கள்? நாங்கள் அங்கேயே இருந்திருப்போம் என்று இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுத்தார்கள். இந்த சமயத்தில் தான் தேவ ஊழியக்காரனாகிய மோசே பயப்படாதிருங்கள் (யாத். 14:13) என்று விசுவாசத்தோடு சொல்கிறார். இவ்வளவு நாட்கள் பயந்து வாழ்ந்தார்கள், சின்ன தவறு பண்ணினாலும் அடி, வேலை செய்யாவிட்டாலும் அடி, அவர்களை பயத்திலே அரசாங்கம் வைத்திருந்தது. அதனால் தான் ஒவ்வொரு காரியத்திற்கும் பயப்படுகிறார்கள். கடைசி காலத்தில் மக்களை பயத்திற்குள்ளே வைத்திக்க வேண்டும் என்பதே சாத்தானுடைய திட்டம். பயம் என்ற ஆயுதத்தை தான் சாத்தான் முதலாவது பயன்படுத்துவான். ஏதாவது ஒரு சூழ்நிலையைக் கொண்டு வந்து பயப்படுத்துவது போல் வந்தாலும் பயப்படாதீர்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.



**"கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்''** (யாத். 14:14). இவர்களுக்கு யுத்தம் பண்ணி பழக்கம் இல்லை. அடிமைகளாக இருந்து வந்தவர்கள். அதே சமயத்தில் அடுத்த தலைமுறை எழும்பினார்கள். யுத்தத்தை பழக்குவித்து ரெவிதீமியிலே வரும்போது, யுத்தத்திற்கு ஆட்களை எடுத்துக் கொண்டு போய் யுத்தம் பண்ணு என்று யோசுவாவிடம் சொல்கிறார். சில சமயம் அமைதியாக இருக்க சொல்வார், சில சமயம் யுத்தம் பண்ண சொல்வார். எல்லா நேரத்திலும் அமைதியாக இருக்க சொல்லமாட்டார். இப்பொழுது நீங்கள் சும்மா இருங்கள், உட்கார்ந்து வேடிக்கை பாரு, நான் யுத்தம் பண்ணுகிறேன் என்று கர்த்தர் சொல்கிறார். அதேநேரம் ரெவிதீமியிலே, அமலேக்கியர் யுத்தம் பண்ண வந்தபோது, நீ சும்மா இரு, நான் யுத்தம் பண்ணுவேன் என்று சொல்லவில்லை. யுத்தம் பண்ண ஆட்களை திரட்டிக் கொண்டுபோ, நீ யுத்தம் பண்ணு, நான் ஜெயம் கொடுப்பேன் என்று சொல்கிறார். சிலகாரியத்தில் அமைதியாக இருக்க சொல்வார். சில காரியத்தில் எதிர்த்து நின்று

யுத்தம் பண்ணு என்று சொல்வார். இரண்டிற்கும் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

இப்போது அவர்களுக்கு இரண்டு பிரச்சனை உண்டாகிறது. ஒரு பக்கம் செங்கடல். இன்னொரு பக்கத்தில் பார்வோனு டைய சேனை. இரண்டிற்கும் நடுவில் வனாந்தரத்தில் அகப்பட்டு கொண்டார்கள், இனிமேல் தப்ப முடியாது, அவர்களுக்கு முன்னால் கடலின் அலை வீசிக் கொண்டிருக்கிறது, பின்னால் பார்வோனுடைய சேனை. இரண்டிற்கும் நடுவில் அகப்பட்டு கொண்ட சூழ்நிலை. இப்போதுதான் அமைதியாக இருங்கள் என்று தேவன் ஒரு கட்டளைக் கொடுக்கிறார், **“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு”** (யாத். 14:15).



எல்லாரும் புறப்பட தயாராகுங்கள் என்று சொன்ன போது, நாங்கள் எங்கே போவோம், இந்த பக்கம் கடல், அடுத்த பக்கம் பார்வோனுடைய சேனை என்று ஜனங்கள் சொன்னார்கள். கர்த்தர் புறப்பட சொன்னார் புறப்படுங்கள் என்ற மோசே சொன்னார்.

**நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்”** (யாத். 14:16) என்று கர்த்தர் சொன்னார். மோசே இந்த வழியாக போ, நான் இந்த செங்கடலை பிளப்பேன் என்று கர்த்தர் மோசேயிடம் முன்கூட்டியே சொல்லவில்லை. இப்போதுதான் கர்த்தர் சொல்கிறார், மோசே உன் கோலை நீட்டு, செங்கடலை பிளந்து விடு என்கிறார்.



25லிருந்து 30 மீட்டர் உயரம் கடலின் ஆழத்தில் தண்ணீர் சுவர் போல் நிற்கிறது. அதற்கு நடுவில் கர்த்தர் நடத்திக் கொண்டு போகிறார். இப்போது, பார்வோனுடைய சேனை இவர்களைத் தொட விடாதபடி, அக்கினி ஸ்தம்பம், மேகஸ்தம்பம் பின்னால் போய் மறைத்து விட்டது. பார்வோனுடைய சேனை ஸ்தம்பித்து நின்று விட்டது. ஏனென்றால் இஸ்ரவேல் மக்கள், பார்வோனுடைய சேனை, பிள்ளைகளை தொடவிடாதபடி தேவன் எல்லையைக் குறித்து விட்டார். மேகஸ்தம்பத்தையும், அக்கினி ஸ்தம்பத்தையும் நிறுத்தி விட்டார். பார்வோனுடைய சேனையால் முந்தி வரமுடியவில்லை. சத்துரு உங்களுக்கு விரோதமாக எழும்பி வந்தாலும், உங்களை அழித்துவிட வந்தாலும், இம்மட்டும் வா, மிஞ்சி வராதே என்று கர்த்தர் சொல்வார்.

இவர்கள் என்னுடைய ஜனம், என்னுடைய பிள்ளைகள், என்னால் மீட்கப்பட்டவர்கள், எகிப்திலிருந்து வெளியே வந்தவர்கள், அவர்களை உன்னால் தொட முடியாது என்று உங்களுக்கும் சத்துருவுக்கும் நடுவாக கர்த்தர் வந்து நிற்பார். பயப்படாதீர்கள்! யார் உங்கள் மேல் கை போட முடியும்? யார் உங்களைத் தொட முடியும்? அவருடைய வழியில் நடக்கும் வரைக்கும் பாதுகாப்பு இருக்கும். உங்களுக்காக கர்த்தர் யுத்தம் பண்ணுவார்!

**அன்பான வாலிப மகனே / மகளே! ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து பயந்துக் கொண்டிருக்கிறீர்களா? நான் உன்னோடு இருக்கிறேன், ஏன் பயப்பட வேண்டும்? என்று இயேசு சொல்கிறார். உயிர்த்தெழுந்த இயேசுவை சொந்த மாக்கி கொள்ளுங்கள். விசுவாசத்தோடு உங்கள் வாழ்க்கையில் அவருக்கு இடம் கொடுக்கும் போது, உங்கள் உள்ளத்தில் சமாதானமும் அமைதியும் உண்டாகும். உங்களுக்காக கர்த்தர் யுத்தம் பண்ணி ஜெயம் கிடைக்கச் செய்வார்!** ●

# எரேமியா



**(பாவத்தைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் எச்சரிப்பு)**

அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதம் பெரிய தீர்க்கதரிசிகள் நூல்களில் இரண்டாம் புத்தகமான “எரேமியா” பற்றி சுருக்கமாக காணலாம்.

## அறிமுகம்

எரேமியா புத்தகத்தின் பாவத்தின்மீது ஆண்டவரின் நியாயத்தீர்ப்பைக் குறித்த எச்சரிப்பு மற்றும் மக்கள் உண்மையாய் மனந்திரும்பும் பட்சத்தில் நம்பிக்கைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறது.

**ஆசிரியர்:** எரேமியா

**காலம்:** கி.மு. 627 கி.மு. 580

**அதிகாரங்கள்:** 52

**வசனங்கள்:** 1,364

**வார்த்தைகள்:** 42,659

**முக்கிய நபர்:** இந்நூல் முழுவதும் வரும் முக்கிய பாத்திரம் “எரேமியா”. அவரது செய்திகள் எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவம் ஆகியவை.

## எரேமியாவில் கிறிஸ்து

எரேமியாவில் கிறிஸ்துவைப் பற்றி பல வகையாக சித்திரங்கள் உள்ளன.
அவர், நித்திய ஊற்றாகவும் (2:13; யோவான் 4:14)
கீலேயாத்தின் பிசின் தைலமாகவும் (8:22)
நல்ல மேய்ப்பன் (23:4)
நீதியின் கிளை (23:5)
நீதியின் கர்த்தர் (23:6)
புது உடன்படிக்கையை கொண்டு வருபவர் (31:31-34

## எரேமியா சுருக்கம்

### எரேமியாவின் அழைப்பும், ஊழியமும்

அழைப்பு (1:1-10 வசனங்கள்)
அழைப்பின் உறுதி (1:11-19 வசனங்கள்)

### யூதேயாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்

- யூதேயாவைக் குறித்த தண்டனை (2:1-25:38 வசனங்கள்)
- எரேமியாவின் போராட்டம் (26 - 29 அதிகாரங்கள்)
- யூதருக்கு பாதுகாப்பின் உறுதிமொழி (30 - 33 அதிகாரங்கள்)
- எருசலேம் அழிக்கப்படும் முன் (34 - 39 அதிகாரங்கள்)
- எருசலேமின் அழிவு (39:1-18 வசனங்கள்)
- எருசலேம் அழிவுக்குப் பின்விளைவுகள் (40 - 45 அதிகாரங்கள்)

### யூதரல்லாத புறமக்களுக்கு தீர்க்கதரிசனம்

- எகிப்துக்கு எதிரான தீர்க்கதரிசனம் (46:1-28 வசனங்கள்)
- பெலிஸ்தருக்கு எதிரான தீர்க்கதரிசனம் (47ம் அதிகாரம்)
- மோவாபியருக்கு எதிரான தீர்க்கதரிசனம் (48ம் அதிகாரம்)
- அம்மோனியருக்கு எதிரான தீர்க்கதரிசனம் (49:1-6 வசனங்கள்)
- ஏதோமியருக்கு எதிரான தீர்க்கதரிசனம் (49:7-22 வசனங்கள்)
- தமஸ்குவுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (49:23-27 வசனங்கள்)
- அரபியாவுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (49:28-33 வசனங்கள்)
- ஏலாமியருக்கு எதிரான தீர்க்கதரிசனம் (49:34-39 வசனங்கள்)
- பாபிலோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (50, 51 அதிகாரங்கள்)

சரித்திரத்தின் அடிப்படையில் (52ம் அதிகாரம்)

சாதனை: சுமா



# துணிந்து செயல்படு!

**சாதனையாளர்களாக வலம் வந்துக் கொண்டிருக்கும் இளம் வாலிபர்களுக்கு வாழ்த்துக்கள். பூமியில் மனிதர்களாக பிறக்கும் ஒவ்வொருவரும் சாதனையாளர்களாகவே பிறக்கின்றோம். ஆனால் நாம் வளர வளர நம்மைச் சுற்றி அநேக பிரச்சனைகள், தோல்விகள், அவமானங்கள் போன்ற அனைத்து காரியங்களும் கூடவே வளர ஆரம்பிக்கும். அவற்றைக் கண்டு சோர்ந்து, சாதனை ஓட்டத்தை பாதியில் நிறுத்தியவர்கள் உண்டு. சொற்ப நபர்களே சாதனை ஓட்டத்திற்கு எதிரே வரும் அனைத்துக் காரியங்களையும் தனக்குப் பின்னே நிறுத்தி, முன்னே இவர்கள் ஓடி வெற்றி வாகை சூட்டுகின்றனர். இதை வாசிக்கும் உங்களை சிந்திக்க வைக்கக்கூடிய சாதனைப் பெண்ணின் வாழ்க்கை உங்களுக்காக.**

கல்பனா சரோஜ் மகாராஷ்டிராவிலுள்ள விதர்பா பகுதியில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். பெரிய குடும்பம் ஆனால் வருமானமோ சொற்பம். ஏழ்மை நிலை ஒருபக்கம் இருந்தாலும், கல்பனா மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் இருந்ததால் வீட்டிற்கு அருகிலுள்ள குழந்தைகளுடன் விளையாட இவருக்கு அனுமதி இல்லை. பள்ளியிலும் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து அமர அனுமதியில்லை. கல்பனாவின் இளம் நெஞ்சம் இப்படிப்பட்ட கொடிய காரியங்களை நினைத்து போராடிக் கொண்டிருக்கும் போதே, கல்பனாவை அதிர்ச்சிப்பட வைக்கக்கூடிய இன்னொரு காரியம் அவர்கள் வாழ்வில் நடந்தது. திருமணம் என்றால் என்ன? குடும்பம் என்றால் என்ன? என்று புரிந்துக் கொள்ளத் தெரியாத வயதில் (ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது) கல்பனாவிற்கு குழந்தை திருமணம் நடைபெற்றது. சரி, திருமணம் ஆகிவிட்டது என்று நினைத்து பார்ப்பதற்குள் கல்பனாவின் தலையில் ஒரு இடி விழுந்தது. கல்பனா திருமணம் செய்து சென்ற வீட்டில் 10 பேர் இருந்தனர். கல்பனா செய்யும் சின்ன





சின்ன தவறுகளுக்கெல்லாம் அடியும் உதையும் கிடைத்தது. இதைத் கண்ட கல்பனாவின் தந்தை நீ வாழ்ந்தது போதும் என்று சொல்லி, கல்பனாவை அவரது வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார்.

கல்பனா தன்னுடைய தந்தை வீட்டிலேயே இருந்தார். பிறகு யாருக்கும் பாரமாக இருக்கக்கூடாது என்று தனக்கு தெரிந்த அனைத்து வேலைகளிலும் விண்ணப்பிக்கத் தொடங்கினார். அவர் வயது மற்றும் மிகக் குறைந்த கல்வித் தகுதி இருந்ததால் எந்தவொரு வேலையும் அவருக்கு கிடைக்கவில்லை. உடனே கல்பனா சுயத்தொழில் செய்ய தயாராகி, தையல் கற்றுக் கொண்டு அதில் வரும் வருமானத்தை வைத்து தையல் மிஷினை வாங்கினார். தன்னுடைய தொழிலை உற்சாகமாக செய்துக் கொண்டு வந்தார். ஆனால் கல்பனாவின் வாழ்க்கையைப் பற்றி ஊர் மக்கள் அவதூறாக பேச ஆரம்பித்தனர். இதனால் மனம் உடைந்து தற்கொலைக்கு முயன்ற கல்பனாவை, போராடி மீட்டனர்.



இனி இந்த ஊரில் வாழக்கூடாது என்று முடிவு செய்த கல்பனா, பெற்றோரின் சம்மதத்துடன் மும்பைக்குச் சென்றார். மும்பையிலுள்ள கார்மென்ட் ஃபேக்டரியில் வேலை கிடைத்தது. நிதானமாகவும், நுட்பமாகவும் தையல்



சில தையல் மிஷின்களை வாங்கினார். ஒரு நாளைக்கு 16 மணி நேரம் கடினமாக உழைத்தார்.

கலையைக் கற்றுக் கொண்டார். வேலையில் காட்டிய அக்கறையால் மெல்ல மெல்ல ஊதிய உயர்வுப் பெற்றார். நிம்மதி யான வாழ்க்கை வாழ்ந்தார். ஆனால் சிறிது நாள் கூட கல்பனாவின் வாழ்க்கையில் நிம்மதி நிலைக்கவில்லை. கல்பனாவின் தந்தைக்கு வேலை போய் விட்டது. இதனால் முழு குடும்பமும் கல்பனாவின் வரும ானத்தை நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை உருவானது. தன்னுடைய சேமிப்பையெல்லாம் வைத்து குடும்பத்தை நடத்தத் தொடங்கினார்.

கொஞ்ச நாளிலே கல்பனாவின் தங்கைக்கு உடல்நலக் கோளாறு ஏற்பட்டு, சிகிச்சை அளிக்கத் தேவையான பணம் இல்லாததால், கல்பனாவின் தங்கை மரித்துப் போனாள். இப்பொழுது கல்பனாவிற்கு பணத்தின் அருமை புரியத் தொடங்கியது. இந்தப் புரிதலுக்குப் பின் அரசாங்கத்தால் நலிவுற்றோருக்கு கிடைக்கும் கடன் தொகையைப் பெற்று, சில தையல் மிஷின்களை வாங்கினார். ஒரு நாளைக்கு 16 மணி நேரம் கடினமாக உழைத்தார். கடின உழைப்பில் கிடைத்த பணத்தை வைத்து ஃபர்னிச்சர் கடையை ஆரம்பித்தார். வாய்ப்புகள் கல்பனாவைத் தேடி வர ஆரம்பித்தது. ஒரு நபர் கல்பனாவைத் தேடி வந்து, அவரிடம் ஒரு நிலம் இருப்பதாகவும் அவசர பணத் தேவைக்காக அதை 2 இலட்சம் ரூபாய்க்கு கொடுப்பதாகவும் கல்பனாவிடம் கூறினார். ஆனால் அந்த நிலத்தை விற்பதில் சட்ட சிக்கல் இருந்தது. ஆனாலும் கல்பனா பயப்படாமல் துணிந்து அந்த நிலத்தை வாங்கி, அதிலுள்ள சட்ட சிக்கல்களை நீதிமன்றத்தின் மூலம் முடிவு கண்டார். அந்த நிலத்தில் கட்டிடம் கட்டி ரியல் எஸ்டேட்டிலும் கால் பதித்தார்.

அப்போது மிகவும் பிரபலமான நிறுவனமான கமானி டியூப்ஸ் (Kamani Tubes) மிகப் பெரிய சிக்கலில் இருந்தது. தொடர் நஷ்டம், நிறுவனத்தின் மீது பல வழக்குகள்



இருந்தது? தொழிலாளர்களில் முக்கியமானவர்களில் சிலர் கல்பனாவின் திறமையைக் கேள்விப்பட்டு அவரைத் தேடி வந்து கேட்டார்கள். கல்பனா களத்தில் இறங்கினார். நிறுவனத்தில் திறமையான நிபுணர்களை அமைத்து கமானி டியூப்ஸ் நிறுவனத்திலுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டார். 2000ம் ஆண்டு கமானி டியூப்ஸ் நிறுவனத்தின் தலைவராக பொறுப்பேற்றார். கொஞ்சம் கொஞ்சமாக நிறுவனத்தின் மேலிருந்த கடனை அடைத்தார். மூன்று வருடங்களாக நிலுவையில் இருந்த தொழிலாளர்களின் சம்பளத்தைக் கொடுத்தார். இப்பொழுது கல்பனாவின் தலைமையில் கமானி டியூப்ஸ் நிறுவனம் வெற்றிகரமாக இயங்கி வருகிறது. 2013ம் ஆண்டு கல்பனாவுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்தது. இந்திய அரசு, பாரதிய மகிளா வங்கியின் இயக்குநர்களில் ஒருவராக அவரை நியமித்து கௌரவித்தது. எப்பேர்ப்பட்ட போராட்டம் வந்தாலும் அசையாது தனித்து நின்று வெற்றிப் பெற்றார் கல்பனா.





*அன்பான வாலிபர்களே! பிறக்கும் போது யாராக? என்ன குடும்பத்தில் பிறக்கிறோம்? எப்படி சூழ்நிலை இருக்கிறது? என்பது முக்கியமல்ல. எந்த நிலையில் இருந்தாலும் மனந்தளராமல், விடாமுயற்சியோடு போராடுகின்ற மனநிலையோடு துணிந்து செயல்படும் போது வெற்றி உங்களைத் தேடி வரும். நீங்களும் கல்பனாவைப் போல துணிந்து செயல்படுங்கள்! வெற்றி நிச்சயம்!*

சிந்தனை சிதறல்: ரெபேக்கா டேவிட்

## நாயீன் ஊர் விதவை



அவள் ஒரு விதவை. அவளுடைய ஒரே மகனும் இறந்து விட்டான். அவளுடைய கணவர் இறந்த போது, அன்பான ஒரே மகன் அவளுக்குத் துணையாக இருந்தான். தன்னுடைய வாழ்க்கையே அவன்தான் என்று அவள் நினைத்திருப்பாள். வயதான காலத்தில் தன்னைப் பார்த்துக் கொள்வான் என்று நம்பிக்கையோடு இருந்திருப் பாள். ஆனால், இப்போது அவனும் மரித்து விட்டான். நிர்க்கதியாக நிற்கிற அவளை இனி யார் பார்த்துக் கொள்வார்? துக்கம் தாங்க முடியாமல் அந்தத் தாய் தன் மகன் சவ அடக்க ஊர்வலத்தில் அழுதுக் கொண்டே போகிறாள். இயேசு அந்த வழியே சென்ற போது, அந்தத் தாயின் பரிதாப நிலையைப் பார்த்து உள்ளம் உருகினார். அவளிடம் கனிவாக, ஆறுதல்படுத்தும் விதமாக, 'அழாதே' என்று ஆறுதலான வார்த்தையை சொன்னார். அதுமட்டுமல்ல, பாடைக்குப் பக்கத்தில் போய், அதைத் தொட்டு, "இளைஞனே, நான் உனக்கு சொல்கிறேன், எழுந்திரு!" என்று கட்டளையிட்டார் (லூக்கா 7:13,14). உடனே அந்த இளைஞன் எழுந்து உட்கார்ந்து பேச ஆரம்பித்தான்! இயேசு அவனை அவனுடைய அம்மாவிடம் ஒப்படைக்கிறார். இதைப் பார்த்த அந்த தாய் இது கனவா, நனவா என்று ஆனந்த கண்ணீர் வடித்திருப்பாள்.

அன்பான வாலிபர்களே! நீங்கள் இந்தத் தாயைப் போல் தனிமரமாகி விட்டோமோ அல்லது தனிமரமாகி விடுவோமோ என்று கண்ணீரோடு, துக்கத்தோடு இருக்கலாம். கலங் காதீர்கள்! ஆறுதல் தரும் இயேசு உங்களோடு இருக்கிறார்.

# துக்கத்தில் ஆறுதல்!

## எம்மா ஒயிட்மோர்



அமெரிக்கா தேசத்தில் 1890ஆம் ஆண்டு அக்டோபர் 25ம் நாள் எம்மா ஒயிட்மோர் பிறந்தார். 12 வருடங்கள் இருதயத்தில் பெலவீனத்தோடு, காணப்பட்டவரை ஆண்டவர் அற்புதவிதமாக சுகப்படுத்தினார். இவரைக் கொண்டு தான் செய்யப் போகும் திட்டத்தை, தெளிவாக ஆண்டவர் கற்றுக் கொடுத்தார். ஆண்டவரின் சித்தத்திற்குத் தன்னை அர்ப்ப ணித்தார் ஒயிட்மோர். தமது ஆஸ்திகளை ஏழைகளின் நலனுக்காக செலவிட்டார். கிறிஸ்துவின் அன்பை, வார்த்தைகளில் பிரசங்கிப்பதைவிட அதிகமாக செயலில் காட்டி னார். நடமாடும் கிறிஸ்துவைப் போன்று, தான் செல்லுமிடமெங்கும் இரக்கம் காட்டி நன்மை செய்து வந்தார். பல ஏழைகளின் குடும்பங்களுக்கும், பெண்களுக்கும் "நம்பிக்கையின் வாசல்" என்ற நிறுவனம் அமைக்கப்பட்டு பலருக்கு அதன்மூலம் ஆறுதலும் நன்மையும் அளித்தார். 1931ஆம் ஆண்டு அவர் தன் வாழ்வை இவ்வுலகத்தில் முடிக்கும்போது, 100க்கும் மேற்பட்ட நம்பிக்கையின் வாசல் அமைப்புகள் உலகெங்கும் காணப்பட்டன.

அன்பான வாலிபர்களே! இயேசு கிறிஸ்து ஏழைகள் மீது கொண்டிருந்த இரக்க குணம் நமக்குள் இருக்க வேண்டும் என்பதற்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர் எம்மா ஒயிட்மோர். நீங்களும் சந்திக்கின்ற பேசுகின்ற நபர்களுக்கு இரக்கம் காட்டி ஆறுதல் அளிக்கிறவர்களாக மாற ஒப்புக் கொடுப்பீர்களா?

## பேதுரு



இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவர் சீமோன் பேதுரு. இவர் கி.பி. 1ஆம் நூற்றாண்டில் பெத்சாயிதா என்ற ஊரில் பிறந்தார். இவர் மீன்பிடிக்கும் தொழிலை செய்து வந்தார். ஒருநாள் சீமோன் இரவு முழுவதும் மீன்பிடிக்க பிரயாசப்பட்டு, ஒரு மீன்கூட அவர் வலையில் அகப்படவில்லை. மிகவும் சோர்ந்து போய் தோல்வியுற்ற நிலையில் தன் படகை கரையிலே நிறுத்தினார். மறுநாள் காலையில் இயேசு சீமோனின் படகில் ஏறி ஜனங்களுக்கு போதகம் பண்ணினார். போதகம் பண்ணி முடித்த பிறகு இயேசு, சீமோனைப் பார்த்து படகை ஆழத்திலே தள்ளி வலைகளைப் போடு என்றார். அதற்கு சீமோன் ஐயரே, நாங்கள் இரவு முழுவதும் முயற்சித்து ஒன்றும் அகப்படவில்லை, ஆனாலும் உம் வார்த்தையின்படி செய்கிறோம் என்று ஆழத்திலே வலையைப் போட்டார். உடனே வலையில் மீன்கள் அகப்பட்டன. இரண்டு படகுகள் மீன்களால் நிரம்பின. இதைப் பார்த்த பேதுரு தன்னை பாவி என்று அறிக்கையிட்டு, மனந்திரும்பி தனக்கிருந்த அனைத்தையும் விட்டு விட்டு இயேசுவின் பின் சென்றார்.

**அன்பான வாலிபர்களே! நம்வாழ்வில் பேதுருவைபோல் எத்தனைமுறை முயற்சித்தாலும், தோல்வியையே சந்தித்து சோர்ந்து போய் இருக்கலாம். இந்த ஒருமுறை இயேசுவின் சத்தத்திற்கு செவிகொடுங்கள், ஒரேநாளில் பேதுருவின் தோல்வியை வெற்றியாக மாற்றிய தேவன், உங்களுக்கும் தோல்வியில் ஆறுதல் தருவார்!**

# தோல்வியில் ஆறுதல்!

## எரிக் லிட்டல்



ஸ்காட்லாந்து மிஷனெரிப் பெற்றோரின் மகனாக சீனாவில் பிறந்தவர். "எரிக் லிட்டல்" இளம் வயதிலேயே விளையாட்டுத் துறையில் வெற்றிகளைக் குவித்தார். 100 மீட்டர் ஓட்டத்தில் உலக சாதனை செய்தவர். 1924ம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாயின. அந்த போட்டியில் பங்கு பெற எரிக் ஆசைப் பட்டார். ஆனால் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்திற்கான போட்டி ஞாயிற்றுக்கிழமையில் வந்தது. இதை அறிந்த அவருக்கு மனதில் போராட்டம், உலகப்புகழா அல்லது தேவனுக்கு கீழ்ப்படிவதா? சாட்சியாய் இருக்க வேண்டுமா? அல்லது காட்சி பொருளாய் மாற வேண்டுமா? ஆண்டவரின் நாளில் ஆகாத காரியங்களில் ஈடுபட அவர் மனம் இசையவில்லை. 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை தவறவிட்ட அவர் மற்றொரு நாள் நடந்த 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஓடி தங்கம் பெற்று உலக சாதனை படைத்தார். தேவனுக்காக தோல்வியையும், அவமானத்தையும் பிறர் பேசுவதை பொருட்படுத்தாமல் கர்த்தருக்காக வைராக்கியமாய் நின்றதால் எரிக் லிட்டல் வாழ்வில் தோல்வி போல் தோன்றியதை தேவன் சாதனையாக மாற்றினார்.


**அன்பான வாலிபர்களே! தேவனுக்காக வைராக்கியமாய் நின்றதால், வாழ்க்கையில் அநேக தோல்வியை சந்தித்திருந்தால் கலங்காதீர்கள். ஆறுதலின் தேவன் உங்களோடு இருந்து உங்கள் தோல்வியை ஜெயமாக மாற்றுவார்!**

எழுப்புதல் செய்தி: சதீஷ்

# குடும்ப எழுப்புதல்!



எழுப்புதல் என்ற வார்த்தை இன்று கிறிஸ்தவ உலகத்திலும் ஆவிக்குரிய வட்டாரத்திலும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் வார்த்தை. இந்த எழுப்புதலில் மிக முக்கியமானது குடும்பங்களில் உண்டாகும் எழுப்புதல் ஆகும். குடும்பங்களில் எழுப்புதல் வரும்பொழுது அந்த குடும்பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் இயேசுவுக்கு சாட்சியாக மாறி விடுகின்றனர். கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழும் குடும்பங்களே கிறிஸ்தவ சபைகள் வளரவும், தரிசனம் நிறைவேறவும் மிக முக்கிய பங்காக உள்ளனர். இவர்கள் சபையின் முது கெலும்பைப் போன்றவர்கள் மேலும் இவர்கள் மூலம் தேவனுடைய ராஜ்யம் விரிவாக்கம் பண்ணப்படுகிறது. தேசங்களில் ஏற்பட்ட அனைத்து எழுப்புதலுக்கும் ஆரம்பம் ஜெபமே. ஜெபிக்கிற மனுஷனால் மட்டுமே தன் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு குடும்ப அங்கத்தினரையும் ஜெபிக்க வைக்க முடியும்.



நூற்றுக்கு அதிபதியான கொர்நேலியு எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபிக்கிற மனிதனாக இருந்ததால்தான் அவருடைய முழு குடும்பத்தாரும் தேவனுக்கு பயந்து நடந்தனர். **“அவன் (கொர்நேலியு) தேவபக்தியுள்ளவனும் தன்வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான்”** (அப். 10:2). நூற்றுக்கு அதிபதியாய் பெரிய பொறுப்பில் கொர்நேலியு இருந்தாலும் அவர் தேவனுக்கடுத்தக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவராயிருந்தார்.



குடும்ப தலைவன் என்பவன் தன் குடும்பத்தை ஆள்பவனாகவும், குடும்பத்தை நடத்தும் பொறுப்புகளை ஏற்று அவற்றை நிறைவேற்றுகிறவனாகவும் இருக்கிறான். குடும்பத்தில் எழுப்புதல் வருவதற்கு குடும்ப தலைவன் மட்டும் ஜெபிக்கிறவர்களாக இருந்தால் போதாது, குடும்ப தலைவிக்கும் மிக முக்கிய பொறுப்பு இருக்கிறது. கர்த்தருக்குப் பயந்து நடக்கும் குடும்ப தலைவி குடும்பத்திற்கு பொக்கிஷமாக இருக்கிறாள். **“புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்”** (நீதி. 14:1). தன் குடும்பத்தை அழிப்பதற்கு தாவீது 400 படை வீரர்களுடன் வருகிறார் என்ற செய்தியை கேள்விப்பட்டவுடன் அபிகாயில் வெகு தீவிரமாய் செயல்பட்டு தாவீதுக்காகவும், அவருடைய ஆட்களுக்காகவும் ஏராளமான பதார்தங்களைத் தயார் செய்கிறாள். அப்பம், திராட்சைரசம், ஆட்டிறைச்சி, வறுத்த பயிறு, அத்திப்பழ அடைகள் என சகலத்தையும் கொண்டு போகிறாள். இதன் மூலம் தன் குடும்பத்தின் மீது வரும் பெரும் பொல் லாப்பை தடுக்கிறாள். ஒரு தனி மனிதனுக்குள் வரும் எழுப்புதல் அவர்களுடைய முழு குடும்பத்தையும் மறுரூபம் அடையச் செய்வது மட்டுமில்லாமல், சமுதாயத்திலும் மாற்றத்தைக் கொண்டு வருகிறது.




ஜான் ஸ்கடர் என்ற தேவ மனிதர் இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். பின்பு தன்னை முழு நேர ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார். அதுமட்டு மல்லாமல் அவர் தனது ஏழு மகன்களையும், இரண்டு மகள்களையும் மிஷனெரிப் பணிக்கென்று அர்ப்பணித்தார். இதைவிட ஆச்சரியமான செய்தி என்னவென்றால், அவரது குடும்பத்திலுள்ள 43 பேர்களும் கிறிஸ்தவப் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டனர் என்பது மிகவும் குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும். ஜான் ஸ்கடரின் பேத்தி தான் ஆசியாவிலேயே மிகச் சிறந்த மருத்துவமனையான வேலூர் ஸீஎம்ஸீ மருத்துவம னையை நிறுவிய ஐடா ஸ்கடர் ஆவார். ஐடா ஸ்கடர் மூலம் நிறுவப்பட்ட இந்த மருத்துவமனை இன்றைக்கு லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக உள்ளது. ஜான் ஸ்கடர் குடும்பத்தில் உண்டான எழுப்புதல் தமிழ்நாடு வரைக்கும் வந்து எவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் கண்கூடப் பார்த்து கொண்டு தான் இருக்கிறோம்.

***இதை வாசித்துக் கொண்டிருக்கும் எனக்கன்பான வாலிபர்களே! நீங்களும் உங்கள் குடும்பத்தில் எழுப்புதல் வர வேண்டும் என்று இரவும் பகலும் ஜெபிக்க ஆரம்பிப்பீர்களானால், தேவன் உங்கள் ஜெபத்தை கேட்டு எழுப்புதல் அக்கினியை உங்கள் குடும்பத்தின் மீது போடுவார், உங்கள் முழு குடும்பமும் தேவனுக்கு சாட்சியாக நின்று இயேசுவை மகிமைப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்விதமாக அனுதினமும் ஜெபம் செய்து தேவனைச் சார்ந்து கிறிஸ்துவை பிரதிபலிக்கும் குடும்பமே தேவனை மகிமைப்படுத்துகிற குடும்பமாக இருக்கிறது.***

தொடரும்...



## வேதாகமத்தில் பறவைகள்

# கழுகு

நிகழ்வு: கெத்சி கிளாரின்





கழுகுகள் எட்டு வகைகள் உண்டு. மிக உயரத்தில் பறந்து கொண்டிருப்பதால் கழுகின் கண்ணோட்டம் மிகவும் பரந்து விரிந்த நிலப்பரப்பை அடக்கி இருக்கும்.

இப்படிப்பட்ட உயரங்களில் வாழும் கழுகினிடத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான காரியத்தை இம்மாதத்தின் பகுதியில் காண்போம்...

### கழுகின் வளர்ப்பு முறை

**கழுகு கன்மலையிலும், சிகரத்திலும் யாரும் எளிதில் நெருங்க முடியாத இடத்திலும் தன் கூட்டைக் கட்டும்.**

**கடினமான மரக்குச்சுகளை மலைப்பிரிவுகளில் அடுக்கி அதற்கு மேல் நார்களை வைத்து நழுவி விடாமல் திணித்து சரிசெய்து, அதற்கு மேல் பஞ்சு போன்று மிகவும் மிருதுவான பொருட்களை விரித்து மெத்தை போன்று அமைக்கும்.**

**துவக்கத்தில் குஞ்சு அந்த சொகுசான கூட்டில் வளரும். குஞ்சுகள் சற்று வளர்ந்தவுடன் தாய்க்கழுகு மிருதுவான பொருட்களை சிறிது சிறிதாக அகற்றிவிடும்.**

**இப்பொழுது குஞ்சுகளுக்கு கரடு முரடான குச்சிகள் உருத்தி கடினமான வாழ்க்கை முறைக்கு பக்குவப்படும்.**

**சிறகுகள் ஓரளவுக்கு வளர்ந்தவுடன் தாய்க்கழுகு தன் கூட்டை முற்றிலும் கலைத்து அந்தக் குஞ்சுகளை வெளியே தள்ளிவிடும்.**

**அவைகள் தடுமாறி தரைநோக்கி விழ ஆரம்பிக்கும்போது, கடைசி இக்கட்டான சூழ்நிலையில் தாய்க்கழுகு பறந்துபோய், தன் இறக்கைகளின் மேல் அதின் குஞ்சுகளை தாங்கிக்கொண்டு மறுபடியும் தன் கூட்டில் வந்து விடும்.**

**இப்படி பலமுறை குஞ்சுகள் விழுவதும் தாய் கழுகு அவைகளை தாங்கிக்கொண்டு வருவதுமாக இருக்கும். இறுதியில் அதன் குஞ்சுகள் இப்பயிற்சியினால் பறக்க ஆரம்பித்து விடும்.**

நம் தேவனும் இப்படிதான் நம்மை பல வழிகளில் பயிற்றுவித்து நம் விசுவாசத்தையும் பெருகப்பண்ணுகிறார்.











"நான் உங்களை கழுகுகளுடைய செட்டைகளின் மேல் சுமந்து உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்களே" (யாத். 19:4).

கழுகைப்போல் நம் வாழ்வில் உயர்ந்த ஸ்தலங்களுக்கு செல்ல விரும்பினால் இப்படிப்பட்ட பயிற்றுவித்தல் நமக்கு அவசியம். ஏனவே நம் தகப்பனாகிய கிறிஸ்துவினிடத்தில் இத்தகையான பயிற்றுவித்தலுக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்....


உயரப் பறப்போம்...

# சிறுப்பெண்ணின் ஆத்தும ஆதாயம்



பெயர் குறிப்பிடப்படாத இஸ்ரவேல் நாட்டைச் சேர்ந்த ஒரு சிறு பெண் சீரியப் படையினாரால் சிறைபிடிக்கப்பட்டு, நாகமானின் மனைவிக்கு வேலை செய்வதற்கு அடிமையாக கொண்டு வரப்பட்டாள். அம்மாவின் செல்லப்பிள்ளையாக இருந்த இந்த சிறுப்பெண் தனது தாயைப் பிரிந்து எவ்வளவாய் தவித்திருப்பாள். இஸ்ரவேலனல்லாத ஒருவன் வீட்டில் வேலைக்கு அமர்த்தப் பட்டதால் அந்த பிஞ்சு உள்ளம் எவ்வளவாய் துடித்திருக்கும். ஆனாலும், தனது எஜமானும், சீரிய நாட்டு ராஜாவின் படைத்தளபதியுமான நாகமான் குஷ்டரோகத்தினால் அவதிப்படுவதைக் கண்ட அவள், பார்க்காததை போல இருக்கவில்லை, தனக்குக் தீங்கிழைத்தவன் வேதனைப்படட்டும் என்று பேசாமல் இருக்கவுமில்லை. சிறுப்பெண் நாகமானின் மனைவியிடம் என் எஜமான் சமாரியாவிலுள்ள தீர்க்கதரிசியினிடத்தில் போனால் அவருடைய குஷ்டரோகத்தை நீக்குவார் என்று ஒரு ஆலோசனை கொடுத்தாள். உடனே நாகமானின் மனைவி தாமதிக்காமல் இந்த காரியத்தை சொல்கிறாள். நாகமானும் சிறுப்பெண்ணின் சொல்லைக்கேட்டு ராஜாவிடத்தில் செல்ல, சீரிய ராஜா இஸ்ரவேல் ராஜாவுக்கு நிருபங்களை அனுப்புகிறார். எலிசாவிடம் நாகமான் செல்கிறார். உடனே எலிசா நாகமானிடம் யோர்தான் நதியில் போய் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு அப்பொழுது உன் மாம்சம் மாறி நீ சுத்தமாவாய் என்று சொன்னார். வெகுத் தொலைவிலிருந்து பிரயாணம் செய்து வந்தவனிடம் யோர்தான் நதியில் போய் ஏழுதரம் குளி என்று சொல்கிறாரே, தீர்க்கதரிசி வந்து தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, குஷ்டரோகத்தை நீக்குவார் என நினைத்து வந்திருப்பார். நான் ஸ்நானம் பண்ணி சுத்தமாவதற்கு எனது ஊரில் நதிகள் இல்லையா? என்று யோசித்திருக்கலாம். ஆனால் அவனது ஊழியக்காரர் அந்த தீர்க்கதரிசியிடம் ஸ்நானம் பண்ண தானே சொல்கிறார், ஸ்நானம்பண்ணும் என்று சொன்னதும் தேவ மனிதனுடைய வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் மூழ்கி எழுந்தபோது அவர் குஷ்டரோம் நீங்கி, அவருடைய சருமம் சிறுபிள்ளையின் சருமம் போல அழகாக மாறியது.





நாகமான் சிறுப்பெண்ணின் ஆலோசனையையும், அவருடைய ஊழியக்காரரின் ஆலோசனையையும் கேட்காமல் புறக்கணித்திருந்தால் சுகத்தைப் பெற்றிருக்க முடியாது. இந்த சிறுப்பெண்ணும் நான் அடிமையாக வேலைக்கு வந்திருக்கிறேன், நான் சொல்லி எஜமான் கேட்கவா போகிறார் என்று அவள் யோசிக்காமல், தனக்கு தீமை செய்தவருக்கு நன்மை செய்ய உடனே செயல்பட்டாள். சரீர சுகத்துடன் ஜீவனுள்ள தேவனை ஆராதிப்பவராக திரும்பி வந்தது அந்த சிறுப்பெண்ணுக்கு எத்தனை மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள்.

**அன்பான இளம் வாலிபர்களே! இந்த சிறுப்பெண் அடிமையாக வந்த இடத்திலும் தன் எஜமானுக்கே ஜீவனுள்ள தேவனை குறித்து சாட்சி சொல்லி ஆத்தும ஆதாயம் செய்ய முடியுமானால், நீங்கள் படிக்கிற, வேலை செய்கிற இடத்தில் எவ்வளவாய் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய முடியும் என்று சிந்தித்து செயல்பட்டுப் பாருங்கள். நாகமான் வீட்டு சிறுப்பெண்ணைப் போல எவ்விடத்திலும் ஆண்டவரைப் பற்றி சொல்ல நீங்கள் ஆயத்தமா? ●**

ஜெயம்: எஸ்தர்

# ஜெபக்கையேடு

## மார்ச் 2022

STOP VIOLENCE AGAINST WOMEN

1 பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக புகார்கள் அதிகரித்துள்ளது. இவை குறைக்கப்பட ஜெபிப்போம்.

2 பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்பட புதிய முயற்சிகள் அரசு எடுக்க ஜெபிப்போம்.



3 தேசத்தில் உள்ள பெண்கள் பாதுகாக்கப்படவும், பெண்களுக்கு விரோதமாக எழும்புகிற குற்றங்கள் குறைக்கப்படவும் ஜெபிப்போம்.

4 குடும்பங்களில் ஏற்படும் வன்முறை சம்பவங்கள் குறைக்கப்படவும், பெண்களுக்கு வேண்டிய உரிமைகள் வழங்கப்படவும் ஜெபிப்போம்.




5 தினமும் 77 பலாத்கார வழக்குகள் பதிவாகி வருவது தடுக்கப்படவும், பெண்களுக்கு வேண்டிய நீதி கிடைக்கப்பெறவும் ஜெபிப்போம்.

6 பெண்களுக்கு ஏற்படும் குற்றங்களில் 18 வயதை தாண்டிய 28 ஆயிரத்துக்கும் மேலானவர்கள், பாதிக்கப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

7 கணவர் மற்றும் புகுந்த வீட்டாரால் ஒரு லட்சத்துக்கும் அதிகமான பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். பெண்களுக்கு வீடுகளில் பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.

8 வரதட்சணைக் கொடுமையால் இறந்ததாக 6966 வழக்குகள் பதிவாகியுள்ளது. வரதட்சணைக் கொடுமைகள் நம் தேசத்திலிருந்து முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.

9 பெண்கள் மற்றும் குழந்தைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

10 பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் அதிகரிப்பதால், காவல் துறை பாதுகாப்பை அதிகரிக்க ஜெபிப்போம்.

11 இந்தியாவில் பெண்கள் கொலை, கட்டாய திரும ணம் மற்றும் பணத்திற்காக கடத்துகிறார்கள். கடத்தல் கும்பல்களை அரசு கண்டுபிடித்து தகுந்த தண்டனை வழங்கப்பட ஜெபிப்போம்.

12 பெண்களுக்கு எதிரான குற்றங்களில் உத்திரபிரதேசம் மாநிலம் முதலிடத்தில் உள்ளதாக தேசிய மகளிர் ஆணையம் தெரிவிக்கிறது. அந்த மாநிலத்தில் கிரியை செய்யும் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

13 உத்திரபிரதேசத்தில் 2021ம் ஆண்டு மட்டும் 31,000 பெண்களுக்கு எதிரான வழக்குகள் பதிவாகியுள்ளது. வழக்குகள் சீக்கிரத்தில் முடிக்கப்பட ஜெபிப்போம்.

14 கடந்த 50 ஆண்டுகளில் உலக அளவில் 14 கோடியே 26 லட்சம் பெண்கள் காணாமற்போயுள்ளனர். அரசு துரித நடவடிக்கை எடுத்து செயல்பட ஜெபிப்போம்.



**15** பெண்களைக் கடத்தி பணம் சம்பாதிக்கும் நபர்கள் மனந்திரும்பி இயேசுவின் பக்கம் வர ஜெபிப்போம்.

**16** பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

**17** இந்தியாவில் 2017ம் ஆண்டு யூனிசெப் அறிக்கைபடி 27% பெண் குழந்தைகள் 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்கிறார்கள். குழந்தை திருமணம் தடை செய்யப்பட ஜெபிப்போம்.



**18** இலங்கையில் உணவு இல்லாமல் பட்டினியால் மக்கள் தவிக்கிறார்கள். உணவுகள் கிடைக்கப்பெறவும், பட்டினி பஞ்சங்கள் மாற ஜெபிப்போம்.

**19** அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் ஏற்பட்டு, கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசி, தானியங்கள் கிடைக்கப்பெறவும், விலைவாசி குறைக்கப்படவும் ஜெபிப்போம்.




**20** ஆன்லைன் ரம்மி விளையாட்டிற்கு அடிமைப்பட்டிருக்கும் சுமார் 30 லட்சம் பேர் விடுதலையாக்கப்படவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**21** பணத்தை செலவு செய்து விளையாடி தோல்வியுற்று, கடன் தொல்லை அதிகரிப்பினால் தற்கொலை செய்வது தடுக்கப்பட ஜெபிப்போம்.

**22** ரம்மி விளையாட்டினால் மக்கள் பாதிக்கப்படாமலிருக்க, மத்திய மாநில அரசு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள ஜெபிப்போம்.

**23** ஆன்லைன் ரம்மி விளையாட்டை நம் தேசத்திலிருந்து தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

**24** காற்றினால், பூமியதிர்ச்சியினால், நெருப்பினால் பாதிப்புகள் ஏற்பட்டு பட்டணங்கள் சீர்குலைக்கப்படாமல், பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.




**25** கொள்ளை நோயினால் வரும் பாதிப்புகள் நம் தேசத்தை விட்டு முற்றிலும் ஒழிக்கப்படவும் ஜெபிப்போம்.

**26** இந்தியாவிலுள்ள சுமார் 2 லட்சம் திருச்சபைகளின் எழுப்புதலுக்காகவும், சுமார் 24.8 கோடி குடும்பங்களின் எழுப்புதலுக்காகவும் ஜெபிப்போம்.

**27** எழுப்புதலுக்காக தேவன் தெரிந்து கொண்ட ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் தரிசனத்தை விட்டு வழிவிலக செய்யும்படி போராடுகிற பிசாசின் வல்லமைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**28** தேவன் விரும்பும் சுத்திகரிப்பு சபைகளிலும், ஊழியங்களிலும் உண்டாக ஜெபிப்போம்.

**29** சபைகளின் பரிசுத்த குலைச்சலை உண்டாக்குகிற காரியங்கள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.



**30** சபைகளில் கள்ள உபதேசத்தைத் தூண்டுகிற பொல்லாத ஆவிகள் கட்டப்படவும், கள்ள தீர்க்கதரிசனத்தைக் கொண்டு வருகிற ஆவிகள், கள்ள ஊழியர்களை எழுப்புகிற ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

**31** ஜனங்களுக்குள் காணப்படுகிற அறியாமையின் இருள் விலகவும், ஆவிக்குரிய விழிப்புணர்வு உண்டாகவும் ஜெபிப்போம்.

# Petra

பேதுருவோடு ஒரு பயணம்...



ஊழிய பயணம்: வயலா

பகுதி 2

பேதுருவோடு பயணிக்க ஆயத்தமா? அப்ப சீக்கிரம் வாங்க படகில் ஏறுங்க... படவு சீஷர்களோடு அக்கரையிலுள்ள கப்பர்நகூமுக்கு நேராய் கிளம்ப போகுது (மத். 14:22,23; மாற்கு 6:47-51; யோவான் 6:16-21). உண்மையிலேயே இயேசுவோடும், அவர் சீஷர்களோடும் படகில் பயணம் செய்யும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்தால் எப்படி இருக்கும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த இனிய சிந்தனையோடு இந்த நாளில் பேதுருவோடு ஒரு பயணத்தை தொடருவோமா?

## பேதுருவின் விசுவாசமும், அவிசுவாசமும்

ரோமரின் முறைப்படி ஒரு ஜாமம் என்பது 3 மணி நேரங்கள் கொண்டதாகும். அது இரவின் நாலாம் ஜாமம் என்று சொல்லப்படும், அதி காலை 3 மணி முதல் 6 மணி வரை உள்ள நேரம். கலிலேயா கடலின் அலைகள் ஆவேசமாக சீறிப் பாய்ந்துக் கொண்டிருந்தன. பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளித்து, கடல் பயணத்தை கடினமாக்கிற்று. நடுக்கடலில் இருந்த படவிலுள்ள சீஷர்களின் இருதயமோ கடல் அலைகளைக் காட்டிலும் அதிகமாய் தத்தளித்துக் கொண்டிருந்தது. பிழைப்போமா? மாட்டோமா? என்ற மரணத் திகிலோடு ஏறிட்டுப் பார்த்தால் எதிர்காற்றினால் அலைவு பட்டுக் கொண்டிருந்த படவை நோக்கி நிதானமாய், அழகாய் கடலின் மேல் நடந்து வந்துக் கொண்டிருந்தார் இயேசு. அப்பாடா, இயேசு வந்து விட்டார் என்று நிம்மதி, பெருமூச்சு விடுவார்கள் என்று எதிர்பார்த்தால், அசுத்த ஆவிகளை துரத்த அதிகாரம் பெற்றிருந்த சீஷர்கள் (மத். 10:1) அவரை இயேசு என்று நிதானித்தறியாமல் ஆவேசம் (பேய்) என்று அலறினார்கள்.





சீஷர்களின் இதயத்துடிப்பை உணர்ந்த இயேசு உடனே அவர்களோடே பேசி பயப்படாதிருக்கவும், தைரியமாய் இருக்கவும் கூறுகிறார். அவ்வளவு தான் பேதுருவுக்கு எங்கிருந்து தான் தைரியம் வந்ததோ தெரியவில்லை. ஆண்டவரே, நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்கிறார். அவ்வளவு நேரம் இருந்த டென்ஷன் இயேசுவின் சத்தத்தைக் கேட்டவுடன் காணாமல் போய் Sir மிகவும் Coolஆகி, அறிவியல் ரீதியாக புவியீர்ப்பு (gravity) காரணமாக மனிதனால் செய்ய முடியாத ஒன்றை, ஆராய்ச்சி மனதுடன் ஆர்வமாய், இயேசுவின் உண்மை சீடனாய், இயேசுவைப் போல தானும் கடலின் மேல் நடக்க முயற்சிக்கிறார். மற்ற எந்த சீஷருக்கும் கடலின் மேல் நடக்க வாஞ்சை இல்லை. ஆனால் பேதுருவின் வாஞ்சையும், அதற்கும் இயேசுவிடம் அனுமதி கேட்கும் பண்பும், அவரது விசுவாசமும் அவர் விசேஷித்தவர் என்று காட்டுகிறது. பேதுருவிடம் கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கிய சுபாவம், குழந்தையைப்

போல சட்டென்று எதிர்மறையாக மாறக் கூடியவர். விசுவாச வீரனாய் மகிழ்ச்சி பரவசத்துடன் இயேசுவைப் பார்த்துக் கொண்டே படவிலிருந்து இறங்கி துணிச்சலோடு கடலின் மேல் நடக்கத் துவங்கியவருக்கு, பலத்த காற்று பேரலை போன்ற அசாதாரணமான சூழ்நிலைகளினால் அவிசுவாசம் உண்டாகிறது. நானா கடலின் மேல் நடக்கிறேன் என்ற வியப்பு கலந்த சந்தேகம் பேதுருவை அமிழ்ந்து போகச் செய்கிறது. இருப்பினும் இயேசு கைவிட மாட்டார் என்ற விசுவாசத்தோடு ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கூப்பிடுகிறார். அவரது சந்தேகத்தினால் அற்ப விசுவாசியே என்று இயேசுவால் அழைக்கப்பட்டவர். இருப்பினும் இயேசுவின் நேசக்கரம் பேதுருவைப் பிடிக்கிறது. அவர்கள் படவில் ஏறியவுடன் காற்று அமர்ந்தது. கடல் அலைகளைப் போல பேதுருவின் விசுவாசமும், அவிசுவாசமும் ஏறுவதையும் இறங்குவதையும் இந்த சம்பவம் விவரிக்கிறது.



## இயேசுவைக் குறித்த பேதுருவின் அறிக்கை

இயேசு தன்னுடைய சீஷர்களிடம் மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்கிறார் (மத். 16:13-23; மாற்கு 8:27-29; லூக்கா 9:18-20). அதற்கு யோவான்ஸ்நானன், எலியா, எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று பல விடைகள் வந்திருந்தாலும், பேதுரு நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று பதிலளிக்கிறார். கிறிஸ்து என்ற கிரேக்க சொல்லிற்கான எபிரெயச் சொல் மேசியா என்பதாகும். மேசியா வருவார், ரோமர்களின் ஆளுகையிலிருந்து தங்களை விடுவித்து அரசாளுவார் என்று யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இயேசு அரச பரம்பரையிலும், படைபலத்துடனும் வருவார் என்ற தங்கள் எதிர்பார்ப்பைப் போன்று இல்லாததால் அவரை கிறிஸ்து அல்ல என்று யூதர்கள் கருதினர். எனவே இயேசுவை கிறிஸ்து என்று யார் கூறினாலும் அவர்களை தங்கள் மதத்தினின்று விலக்க வேண்டும் என்று கட்டுப்பாடு செய்திருந்தனர் (யோவான் 9:22). ஆனால் இயேசுவை கிறிஸ்து என்று தைரியமாய், முதன்முறையாக பலர் முன்னிலையில், வெளிப்படையாக கூறியவர் பேதுருவே. இதினிமித்தம் இயேசுவின் உள்ளம் மகிழ்ந்தது. மாம்சமும் இரத்தமும் வெளிப்படுத்தாதவற்றை பரலோகத்தில் இருக்கிற பிதா, இதை மற்ற சீஷர்களுக்கு வெளிப்படுத்தாமல் பேதுருவுக்கே வெளிப்படுத்துகிறதினிமித்தம் பேதுருவை பாக்கியவான் என்று இயேசு கூறுகிறார். மேலும் இந்த கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று தன்னைக் குறித்ததான தேவ திட்டத்தையும் பேதுருவுக்கே இயேசு வெளிப்படுத்துகிறார். அந்த திட்டத்தில் பேதுருவும் பணியாற்றும்படி விசேஷித்த ஆவிக்குரிய ஆசீர்வாத மாகிய பரலோகத்தின் திறவு கோல்களை பேதுருவுக்கு இயேசு கொடுக்கிறார். பேதுருவும் அதனை பயன்படுத்தி இயேசுவை கொலை செய்த யூதர்களிடம் தைரியமாய் பிரசங்கிக்கிறார். அவரது ஒருநாள் பிரசங்கத்தில் அநேகர் (3000 பேர், 5000 பேர்) இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 2:14-41, 4:4). புற இனமான ரோமர்களுக்கும் கொர்நேலியு வீட்டில் சுவிசேஷம் அறிவித்து, ஞானஸ்நானம் பெறச் செய்தார் (அப். 10). மேலும் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் அநேகர் கிறிஸ்துவை விசுவாசிக்கச் செய்தார். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுதியான சந்தோஷம் உண்டாகுமாம். அப்படியானால் பேதுருவினிமித்தம் மூவாயிரம் பேர், ஐயாயிரம் பேர் என்றால் பரலோகத்தில் பெரிய கொண்டாட்டமே நிகழ்ந்திருக்கும் இயேசுவின் நாமம் எவ்வளவு மகிமைப்பட்டிருக்கும்.

## பேதுரு கடிந்துக் கொள்ளப்படுதல்

இயேசு தன்னை யாரென்று சீஷர்கள் அறிந்துக் கொண்டார்கள், எனவே தன்னைக் குறித்த முழு தேவ திட்டமான பல பாடுகளையும், சிலுவை மரணத்தையும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வேண்டும் என்பதையும் சீஷர்களிடம் வெளிப்படையாக பேசுகிறார். பிதாவின் வெளிப்படுத்தலைப் பெற்றுக் கொண்ட பேதுரு, சற்று முன்னரே இயேசுவால் பாக்கியவான் என்று புகழப்பட்டார், சீஷர்கள் மத்தியில் உயர்வாக எண்ணப்பட்டார். ஆனால் தற்போது தேவ சித்தத்திற்கு மாறாக தன்னுடைய சொந்த கருத்தையே இயேசுவிடம் கூறுகிறார். சட்டென்று எதிர் மறையாக மாறும் சுபாவத்தினால், தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய் என்று இயேசுவால் கடிந்துக் கொள்ளப்படுகிறார்.

**பேதுருவோடு ஒரு பயணம் இன்னும் பல சுவாரஸ்சியமான சம்பவங்களோடு தொடரும்...**

# வேதாகமத்தின் பெண்கள்

## *குணசாலியான பெண்கள்*

### இயேசுவின் தாயாகிய மரியாள்



கன்னிகையான மரியாள் கர்ப்பவதியாகி இயேசு என்கிற இரட்சகரை இந்த உலகத்திற்கு கொடுத்த குணசாலியான பெண் (லூக்கா 1:26-30). மரியாளைப்போல உலகத்தின் இரட்சிப்பிற்காக பாடுபடுகிறவர்களாக செயல்படுவீர்களா?

### யோகெபேத்



பார்வோன் ராஜா பிறந்த ஆண் குழந்தைகளை நைல் நதியில் போட கட்டளை கொடுத்திருந்தபோதும், இஸ்ரவேலின் தேவன் மேல் நம்பிக்கையோடு தன் குழந்தையை மூன்று மாதம் ஒளித்து வைத்தாள் (யாத்திராகமம் 2:1-11, 6:20). இந்தத் தாயாரைப் போல பிள்ளைகளின் நலனுக்காக எதையும் செய்ய தயாராக இருக்கிறீர்களா?

### யெப்தாவின் மகள்



தேவனை மிகுந்த பக்தியுடன் போற்றிப் பாடுகிறவள். தன் தகப்பன் யெப்தா தேவனுக்கு செய்த பொருத்தனையை நிறைவேற்ற ஒப்புக்கொடுத்த குணசாலியான பெண் (நியாயாதிபதிகள் 11:30-40). இந்த மகளைப் போல பெற்றோருக்கு கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக இருக்கிறீர்களா என்று யோசித்துப் பாருங்கள்.

### யோசேப்பின் மனைவி ஆஸ்நாத்



அந்நிய தெய்வத்தை ஆராதிக்கிறவளாக இருந்த போதிலும் யோசேப்பை அந்நிய தெய்வத்தை ஆராதிக்க அழைத்துச் செல்லவில்லை. மாறாக அவள் ஜீவனுள்ள தேவனை கண்டடைந்ததோடு யோசேப்புக்கு ஏற்ற சிறந்த மனைவியாக இருந்தாள். கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடு அன்பு கூரவும் அவருடன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றவும் தன் கணவனை ஏற்று நடந்தாள் (ஆதியாகமம் 41:36-52). இன்றைக்கு நீங்கள் இயேசுவை அறியாதிருந்தால் ஆஸ்நாத்தை போல இயேசுவை அறிந்து முழுமையான ஆசீர்வாதத்தைப் பெறுங்கள்.

### ரூத்



தன் எதிர்கால வாழ்க்கையை சற்றும் சிந்திக்காமல் தன் மாமியாகிய நகோமியோடு அன்போடு வாழ்ந்த குணசாலியான பெண் (ரூத் 1-4 அதிகாரங்கள்).

## *புத்தியுள்ள ஸ்திரிகள்*

### அபிகாயில்



தன் கணவன் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்கிறாள். தீவிரமாக செயல்பட்டதாலும், தாழ்த்தி மன்னிப்புக் கேட்டதாலும் தன் குடும்பம் இரத்தம் சிந்தாதபடி தாவீதை நிறுத்தியது அவளுடைய புத்திசாலிதனத்தைக் காட்டுகிறது (1 சாமுவேல் 25:1-44). அபிகாயில் போல தன்னை தாழ்த்துகிறீர்களா?

### யாகேல்



தேவ சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்ததால் தேசத்திற்கு மீட்பை ஏற்படுத்திக் கொடுத்தாள். அவள் தன் கருவியைக் குறித்தோ, அவளின் பலத்தைக் குறித்தோ கவலைப்படவில்லை. தேசம் நலம்பெற வேண்டும், தேசத்துப் பெண்களுக்கு விடுதலை வேண்டும், தேசத்தின் பெண்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என ஞானமாய் செயல்பட்டாள். ஒருவேளை சிசெரா வெற்றிப் பெற்றிருந்தால் தேசத்துப் பெண்களின் கற்பு சூறையாடப்பட்டிருக்கும் (நியாயாதிபதிகள் 4:4-24). இவளைப் போல பெண்களுக்காக ஏதாவது செய்ய முன் வருவீர்களா?

### அக்சாள்



தன்னை மணமுடித்துக் கொடுத்த இடம் வறண்ட நிலம் என்று தெரிந்தும் தன் தகப்பனிடம் கோபப்படாமல், எனக்கு நீரூற்று நிலத்தைத் தாரும் என்று புத்தியாய் கேட்டு, நீரூற்று நிலத்தை காலேபிடம் பெற்றுக்கொண்டாள் (யோசுவா 15:16-19, நியாயாதிபதிகள் 1:12-15). அக்சாள் போல நீங்களும் தேவையானதை கேட்டு பெற்றுக் கொள்ள பிரயாசப்படுவீர்களா?

### தெக்கோவா ஸ்திரி

இராஜாவிற்கும் மகனுக்கும் உள்ள பகையை மாற்றி அமைப்பதற்காக முதலாவதாக தன்னை மாற்றிக் கொள்கிறாள் (2 சாமுவேல் 14:1-33). பகையை மாற்றுகிறவர்களாக இருக்கிறீர்களா? அல்லது பகையை அதிகபடுத்துகிறவர்களாக இருக்கிறீர்களா?

## *விசுவாசத்தில் சிறந்த ஸ்திரிகள்*

### கானானிய ஸ்திரி



அவளை நாய் என்ற வார்த்தையை சொன்ன போதும், அவள் அதை மனதில் வைத்துக்கொள்ளாமல் இயேசுவை விசுவாசித்து அவருக்குப் பின் சென்றாள். அவளுடைய விசுவாசத்தை பார்த்து இயேசு வியந்து அந்த வினாடியே அவள் மகளுக்கு சுகம் கொடுத்தார் (மத்தேயு 15:22-28).

### பெரும்பாடுள்ள ஸ்திரி



12 வருடங்கள் தன் செல்வத்தையெல்லாம் செலவழித்தும் அநேக வைத்தியங்களைப் பார்த்தும் சுகம் கிடைக்காமல், தீராத நோய்கள் இயேசுவால் குணமாக்கப் பட்டதை கேள்விப்பட்டு, இயேசுவின் வஸ்திரத்தை தொட்டால் சுகம் கிடைக்கும் என்ற அவளுக்குள் இருந்த விசுவாசம் அவளை சுகப்படுத்தியது (மாற்கு 5:25-34). தீராத வியாதியை இயேசுசுகமாக்குவார் என்ற விசுவாசம் உங்களுக்குள் இருக்கிறதா?

## *தேவனுக்கு ஊழியம் செய்த ஸ்திரிகள்*

### தபித்தாள்



ஏழை விதவைகளுக்கு துணி தைத்து கொடுத்தும் நற்கிரியை செய்தும் எல் லாருடைய மனதையும் கொள்ளையடித்த பெண் (அப்போஸ்தலர் 9:36-41) நீங்களும் தபீத்தாள் போல நற்கிரியைகளை செய்து ஆண்டவருக்காக ஊழியம் செய்கிறீர்களா?

### பெபேயாள்



ஆதித் திருச்சபையில் பெண்கள் பிரசங்கம் செய்ய அனுமதியில்லை. ஆகையால் இவள் பிரசங்க ஊழியம் செய்ய வாய்ப்பில் லை. விருந்தினர்களை உபசரிப்பது உதவி தேவையப்படுவோருக்கு உதவி செய்யும் ஊழியம் செய்திருக்கலாம் (ரோமர் 16:1,2). பெபேயாள் போன்று பின்னால் நின்று ஊழியம் செய்ய உங்களை அர்ப்பணிப்பீர்களா?

## *பெண் தீர்க்கதரிசினிகள்*

### மிரியம்



பழைய ஏற்பாட்டின் ஒரு பாடகி. செங்கடலில் எதிரிகளை கர்த்தர் மூழ்கடிக்கும்போது கர்த்தரை துதித்து பாடினவள் ( யாத்திராகமம் 15:20,21; மீகா 6:4)

### தெபோராள்



இஸ்ரவேல் ஜனங்களின் முதல் பெண் நியாயாதிபதி. இவள் ஒரு தீர்க்கதரிசியும் கூட ( நியாயாதிபதிகள் 4:4-24).

## *அன்பில் சிறந்த பெண்கள்*

### ரெபேக்காள்



ஈசாக்கிற்கு பெண் பார்க்க சென்றபோது, எலியேசருக்கும் 10 ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுத்தாள். ஈசாக்கு தன் தாயை இழந்து 3 வருடம் துக்கத்தில் இருந்தவனை ரெபேக்காளின் அன்பின் நிமித்தம் அவன் துக்கம் மறந்தான் (ஆதியாகமம் 24:15-67). துக்கத்தில் இருப்போருக்கு அன்பை வெளிப்படுத்துகிறீர்களா?

### பார்வோனின் குமாரத்தி



ஆண் குழந்தைகளை நைல் நதியில் போட திட்டமிட்டதால் மோசேயின் தாய் நாணற்பெட்டிக்குள் வைத்து நதியில் வைத்திருந்தாள். பார்வோனின் குமாரத்தி குழந்தையை காப்பாற்றினாள் (யாத்திராகமம் 2:1-10). அழிவிலிருக்கும் ஜனங்களை காப்பாற்ற நீங்கள் ஆயத்தமா?

## *ஜெப ஜீவியத்தில் சிறந்த பெண்கள்*

### அன்னாள்



தன்னுடைய உருக்கமான ஜெபத்தினால் கர்ப்பத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றவள். தன்னுடைய மகனை தேவனுக்காக ஒப்புக் கொடுத்தவள். (1சாமுவேல் 1-2 அதி காரங்கள்)


### எஸ்தர்



தன் உபவாச ஜெபத்தினால் யூத ஜனங்களை அழிவிலிருந்து தடுத்தவள் (எஸ்தர் 7-8 அதிகாரங்கள்)

# வேதாகம
## புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களுக்கு சம்மந்தப்பட்ட வேதாகம சம்பவங்களை பட்டியலிட்டு விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.




பதில் வந்துசேர வேண்டிய கடைசி நாள்
**15.03.2022**

கடந்த மாத விடைகள்

1. சங்கீதம்.119:9 2. சங்கீதம்.51.7 3. 1 யோவான்:4:8
4. சங்கீதம். 147.3 5. 1 தெசலோனி.5;21 6. மத்தேயு.6 :22

JESUS REDEEMS YOUTH MINISTRIES,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org




வெற்றிபெறும் ஒரு நபருக்கு Ear phone பரிசு வழங்கப்படும்



# தேற்றுகிற தேவன்!

என் அன்புக்குரிய வாலிப தம்பி மற்றும் தங்கைகளுக்கு! அனுதினமும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடுள்ள நேச உறவில் நீங்கள் அதிகமாய் வளர வேண்டும் என்று தேவனிடம் வேண்டிக் கொண்டு, இம்மாதக் கட்டுரைக்குள்ளாகப் போவோம்.




என் அன்புக்குரிய வாலிபப் பிள்ளைகளே, இவ்வுலகில் நாம் வாழும் நாட்களில் அநேக சூழ்நிலைகள் வழியாய் கடந்து போகிறோம். சில சூழ்நிலைகள் மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறதாய் இருக்கிறது. பல சூழ்நிலைகள் துன்பத்தையும், வேதனையையும் கொண்டு வருகிறதாய் இருக்கிறது. அப்படியான வேதனையின் பாதையில் நாம் செல்லும்போது, நம் உள்ளம் ஒரு ஆறுதலான வார்த்தைக்காகவும், தேறுதல் கொண்டு வரும் ஒரு துணைக்காகவும் ஏங்கும். இது மனிதர்களுக்குள் இருக்கும் பொதுவான ஓர் இயல்பு. காரணம், தேவன் நம்மை உறவுகளை எதிர்பார்க்கும், மனித உறவுகளை விரும்பும் ஆத்துமாக்களாகத்தான் வடிவமைத்திருக்கிறார். நாம் தனித்து முழு ஜீவியத்தையும் வாழ்வதென்பது மிகவும் கூடாத ஓர் காரியம் (We are designed by God to be social beings).



உதாரணமாக, என் வாழ்க்கையில் நடந்த ஒரு காரியத்தைச் சொல்கிறேன். என்னுடைய கல்லூரி நாட்களில், கல்லூரிக்கு பல தொழில்நுட்ப நிறுவனங்கள் வேலைக்கென்று மாணவர்களை நேர்காணல் செய்யும் படிவந்தார்கள். Campus Interview என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். கல்லூரிப் படிப்பை முடிப்பதற்கு முன்பதாகவே, வேலையைப் பெறக்கூடிய ஒரு வாய்ப்பாக அது அமைந்தது. மிகுந்த எதிர்பார்ப்போடும், நம்பிக்கையோடும் நேர்காணலில் நான் பங்கு பெற்றேன். முடிவுகள் அறிவிக்கப்பட்ட நேரத்தில் என் பெயர் சொல்லப்படவில்லை. என் உள்ளம் உடைந்து மிகவும் வேதனையாக இருந்தது. என் பெற்றோர் முடிவுகளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களே! நான் எப்படி எனக்கு வேலை கிடைக்கவில்லையென்று அவர்களிடம் சொல்வேனென்று எனக்குள் ஒரு போராட்டமாக இருந்தது. அந்நேரத்தில் என் அம்மாவிடமிருந்து தொலைப்பேசி அழைப்பு வந்தது. என் காரியத்தை அவர்கள் என்ன சொல்வார்களோவென்று கண்ணீரோடு விவரித்தேன். ஆனால் என் அம்மாவின் வார்த்தைகளோ, போராட்டக்களமாக இருந்த என்னுள்ளத்தில் சமாதானத்தைக் கொண்டு வந்தது. "கவலைப்படாதே ரவி! இது இல்லையென்றால் உலகம் ஒன்றும் முடிந்து விடாது. உனக்கென்று இருக்கும் வேலை, இதிலும் சிறந்த வேலை நிச்சயமாக உனக்கு கிடைக்கும். துவண்டுவிடாமல் முயற்சி செய்து முன்னேறிப்போ!'' என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் எனக்கு ஆறுதலாக இருந்தது.

என் அன்பு சகோதர, சகோதரிகளே! ஒரு மனிதனுடைய வார்த்தை நமக்கு ஒரு ஆறுதலையும், சமாதானத்தையும் கொண்டுவருமே யானால், ஆறுதலின் தேவனாகிய நம் கர்த்தரின் வார்த்தைகளும், அவர் பிரசன்னமும் எப்படிப்பட்டதான பேராறுதலை நமக்குக் கொடுக்கும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். மட்டுமல்ல, நம்முடைய தேவையின் நேரங்களில் மனிதர்கள் நம்மோடு இருப்பதில்லை. ஆனால் வேதத்தில், "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்." (யோவான் 14:16) என்று வாசிக்கிறோம்.

**பாருங்கள், என்ன ஓர் அருமையான வாக்குத்தத்தம். ஆம் நண்பர்களே, பரிசுத்த ஆவியானவர் ஆறுதல்தரும், தேற்றரவாளனாக எப்பொழுதும் நம்மோடு இருக்க விரும்புகிறார். அவர் நம்மோடு ஓர் நேச உறவில் காலத்துக்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஒருவேளை, இந்தக் கட்டுரையை வாசிக்கும் நீங்கள் வேதனையின் பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கலாம். கவலைப்படாதேயுங்கள்! தேவன் உங்களுக்கு மிகவும் அருகில் இருக்கிறார். உங்கள் உள்ளத்தின் கதவை திறந்து, இந்த ஆறுதலின் தேவனாகிய இயேசுக் கிறிஸ்துவை அனுமதிப்பீர்களா! அவர் தேற்றரவாளனாக அனுதினமும் உங்களோடு இருக்க விரும்புகிறார்!**



# மகளிர் தினம்! மார்ச் 8



உலக அளவில் பெண்கள் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து சிறந்து விளங்கி வருகின்றனர். பெண்கள் என்றால் வீட்டு வேலை செய்வது, அதிகபட்சமாக ஆசிரியர், செவிலியர் பணிக்காக தான் என்ற நிலைமைகளிலிருந்து மாறி, இன்று பைலட், விண்வெளி ஆராய்ச்சி, கம்ப்யூட்டர் என எல்லாத் துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். நாட்டின் முதுகெலும்பான பெண்களை கௌரவிக்கும் வகையில், பெண்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது.

பெண்கள் நாட்டின் கண்கள் என்பது போல, ஒவ்வொரு வீட்டில் இருக்கும் பெண்களும் அந்த வீட்டின் கண்களாக போற்றப்பட வேண்டும். எனவே வீட்டில் இருக்கும் தாய், மனைவி அல்லது சகோதரிகளுக்கு மகளிர் தினத்தன்று உங்களால் முடிந்த ஏதாவது பரிசுப்பொருட்கள் கொடுத்து கௌரவிக்கலாம். நீங்கள் கொடுக்கும் பரிசுப் பொருட்கள் மூலம் அவர்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதோடு அன்பும் அதிகரிக்கும்.

## மகளிர் தினத்தன்று எந்த மாதிரியான பரிசுகளைக் கொடுக்கலாம்...



- பெண்களுக்கு பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும். எனவே பூங்கொத்துக்களையோ, பூச்செடிகளையோ அல்லது அவர்களுக்கு பிடித்த பூக்களை வாங்கிக் கொடுக்கலாம்.

- பெண்களுக்குப் பிடித்த நகைகள், ஆடைகள் மற்றும் அவர்களுக்கு பிடித்த பொருட்களை வாங்கி கொடுக்கலாம். உங்கள் வீட்டில் உள்ள பெண்களுக்கு மட்டுமல்லாமல் அக்கம் பக்கத்தில் வசிக்கும் பெண்கள், வயோதிபர்களுக்கு சிறு பரிசு பொருட்களை வாங்கிக் கொடுக்கலாம்.

- ஒருநாள் சமையலறையிலிருந்து அவர்களுக்கு விடுப்புக் கொடுத்து, உங்களுக்கு தெரிந்ததை சமைத்துக் கொடுங்கள் அல்லது அன்றைக்கு ஒருநாள் மட்டும் அவர்களுக்கு பிடித்த உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுக்கலாமே.

**பெண்களாகிய நீங்கள் உங்களை நீங்களே நேசியுங்கள். ஒரு பெண்ணாக நீங்கள் மற்றவர்களை மிகவும் நேசிக்கிறீர்கள். ஆனால், நீங்கள் உங்களை நேசிக்கவும், கொண்டாடவும் மறந்து விடுகிறீர்கள். எனவே பெண்களாகிய நீங்கள் உங்களையே நேசிக்கும் போது, உங்களுக்குள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.**



# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்!

கெத்சி கிளாரின்

கடந்த மாதத்தில் ஜெபத்தைக் குறித்து சில காரியங்களை நாம் பார்த்தோம். வாசிக்கும் வாலிபராகிய நீங்கள் அனுதினமும் ஜெபிக்க உங்களை அர்ப்பணித்திருப்பீர்கள் என்று கிறிஸ்துவுக்குள்ளாக நாங்கள் நம்புகிறோம்.



### வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில ஜெபங்கள் என்னென்ன?

- **அர்ப்பணிப்பின் ஜெபம்** – தன் இருதயத்தை ஊற்றி பொருத்தனையோடு ஜெபித்த அன்னாள் (1 சாமு. 1:11)
- **கருத்தான ஜெபம் –** மழைப்பெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபித்த எலியா (எபிரேயர் 5:17,18)
- **உகந்த ஜெபம் –** கர்த்தரின் இருதயத்தை அசைக்கும் வண்ணம் உகந்ததாய் ஜெபித்த சாலமோன் (1 இராஜா. 3:9,10)
- **ஆவியில் நிரம்பி ஜெபம் –** ஆவியானவரின் ஆட்கொள்ளுதலால் பெருமூச்சோடு அடி வயிற்றிலிருந்து ஏறெடுக்கும் ஜெபம்.
- **போராட்ட ஜெபம் –** விடுதலைக்காகவும், ஆத்தும இரட்சிப்பிற்காகவும் போராடி ஜெபிக்கும் ஜெபம்.
- **விழிப்பு ஜெபம் –** ஜாமக்காரர்கள் தூங்காமல் நகரத்தை விழித்திருந்து காப்பது போல, நம் தெருவிற்காக பட்டணத்திற்காக தேசத்திற்காக விழித்திருந்து ஜெபிக்கும் ஜெபம்
- **பலத்த சத்தத்தோடு ஜெபம் –** பிசாசுகளை கட்டும் போதும், யுத்தம் பண்ணும்போதும் பலத்த சத்தத்தோடு ஜெபிக்கும் ஜெபம் பரிந்து பேசும் ஜெபம் விக்கிரகத்தின் பிடியில் இருக்கும் மாந்தர்களின் மனக்கண்கள் திறக்கப்படவும் ஆக்கினைக்கு தப்பவும் கர்த்தரிடம் பரிந்து பேசி ஜெபிக்கும் ஜெபம்.
- **கண்ணீரின் ஜெபம்** – வரும் அழிவிலிருந்து பாதுகாக்க, கர்த்தரின் இருதயம் அசைக்கப்பட கண்ணீர் சிந்தி ஜெபிக்கும் ஜெபம்.
- **மன்றாட்டு ஜெபம்** – கர்த்தரின் நியாயத்தீர்ப்பு தேசத்தின் மீது வராதபடி திறப்பிலே நின்று சுயநலமின்றி ஜனங்களுக்காய் கதறி ஜெபிக்கும் ஜெபம்.

### ஜெபத்தின் முடிவில் எப்படிப்பட்ட மாற்றங்கள் தோன்றும்?

- முகத்தில் மாற்றம் தெரியும்
- பிரச்சனைகள் போராட்டங்களை சில வேளைகளில் சந்திக்க நேரிடும்
- முடிவு நன்மைக்கேதுவாய் அமையும்

எனவே நம் வாழ்விலும் தேசத்திலும் பெரியதொரு மாற்றம் உண்டுபண்ண அனுதினமும் ஒழுங்கும் கிரமமுமாக ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்!

# செய்திகள்!

## பிளாஸ்டிக் பொருளுக்கு ஜூலை 1 முதல் தடைஒன்றிய அரசு அறிவிப்பு

வரும் ஜூலை 1ம் தேதி முதல் பிளாஸ்டிக் பொருட்களுக்கு ஒன்றிய அரசு தடை விதித்துள்ளது. இதை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

பருவ நிலை மாற்றத்திற்கு மிகப்பெரிய அளவில் பிளாஸ்டிக் பொருட்கள் தீங்காக உள்ளது. இந்நிலையில், ஒன்றிய சுற்றுச் சூழல் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 2021, ஆகஸ்ட் மாதம் ஒன்றிய அரசால் அடையாளம் காணப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் வகையிலான பிளாஸ்டிக் பொருட்களை ஜூலை 1ம் தேதி முதல் உற்பத்தி, இறக்குமதி, சேமிப்பு, விநியோகம், விற்பனை மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்படுகிறது. உதாரணமாக, பிளாஸ்டிக் காலான காது குடையும் குச்சி, பிளாஸ்டிக் கொடிகள், ஐஸ் கிரீம் கம்புகள், ஸ்ட்ரா, ஸ்பூன், பத்திரிகைகள், சிகரெட் அட்டைகள், 100 மைக்ரானுக்கு கீழ் உள்ள பிளாஸ்டிக் மற்றும் பிவிசி பேனர்கள் ஆகியவையும் இந்த தடையில் அடங்கும்.

இந்த உத்தரவு வரும் ஜூலை 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. ஜூன் 30ம் தேதிக்குள் இந்த பொருட்களை வணிகர்கள், சிறு கடைகள், ஷாப்பிங் மால்கள், சினிமா அரங்கு விற்பனை கூடங்கள் என அனைத்திலும் காலி செய்து விட வேண்டும். இவற்றை கையிருப்பு வைத்திருந்தாலோ, வினியோகம் செய்தாலோ சம்பந்தப்பட்ட இடம் சீல் வைக்கப்பட்டு, உரிய அபராதம் விதிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. - தினகரன், 18 பிப்ரவரி 2022.

## சைபர் குற்றம் புகார் அளிக்க '1930' புதிய எண் அறிவிப்பு

சைபர் குற்றங்கள் குறித்து புகார் அளிக்கும் வகையில் சைபர் க்ரைம் போலீசார் சார்பில் '1930' என்ற புதிய என் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சைபர் குற்றங்கள் அதிகரித்து வருகிறது. அதை கட்டுப்படுத்தும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி தமிழக காவல்துறை பல அதிரடி மாற்றங்கள் செய்து வருகிறது. தமிழகம் முழுவதும் தமிழகம் முழுவதும் மாவட்டம் வாரியாக சைபர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தின் வங்கி மோசடி, இணையதள குற்றங்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சைபர் க்ரைமில் ஏற்கனவே இயங்கி வரும் '155260' என்ற எண்ணிற்கு மாற்றாக '1930' என்ற புதிய சைபர் க்ரைம் உதவி எண் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய எண் மூலம் வங்கி மோசடி குறித்து புகார் அளித்தால் உடனே சம்பந்தப்பட்ட வங்கிக்கு சைபர் க்ரைம் போலீசார் தொடர்பு கொண்டு மோசடி நடந்த வங்கி கணக்கை முடக்கி மோசடி நபர்கள் பணம் எடுக்க முடியாதபடி நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதனால் மோசடி நபர்களிடம் இருந்து பொதுமக்கள் பணம் பாதுகாக்க இந்த அவரச உதவி எண் பயனுள்ளதாக உள்ளது. - தினகரன், 18 பிப்ரவரி 2022.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

JESUS REDEEMS MINISTRIES

50 கோடி சுவிசேஷம்
5 கோடி ஆதாயம்

VISION 2030

## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத் தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசேஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

**இயேசு விடுவிக்கிறார்**
**வாலிபர் ஊழியம்**

# 10 கோடி

**வாலிபர்களுக்கு சுவிசேஷம்**

# 1 கோடி

**வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த**
**15 மணி நேர ஜெபத்திட்டம்**

**தினமும் இந்த தரிசனத்திற்காக**

## 30 நிமிடம் ஜெபிப்பேன்

| | | | |
|---|---|---|---|
| DAY - 1 | DAY - 2 | DAY - 3 | DAY - 4 |
| DAY - 5 | DAY - 6 | DAY - 7 | DAY - 8 |
| DAY - 9 | DAY - 10 | DAY - 11 | DAY - 12 |
| DAY - 13 | DAY - 14 | DAY - 15 | DAY - 16 |
| DAY - 17 | DAY - 18 | DAY - 19 | DAY - 20 |
| DAY - 21 | DAY - 22 | DAY - 23 | DAY - 24 |
| DAY - 25 | DAY - 26 | DAY - 27 | DAY - 28 |
| DAY - 29 | DAY - 30 | | |

Name.....................................................................

Mobile...................................................................

Place.....................................................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 02 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

**ACHIEVERS**
**2022**

# தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை

## வேலூரில்

**மார்ச் 6, ஞாயிறு**
நேரம் மாலை 3 - 6
இடம் : கெத்சமனே ஜெப மையம்
களிஞ்சூர் ரோடு, காந்தி நகர்



செய்தியும், ஜெபமும்
**சகோ. சதீஷ்**

தொடர்புக்கு:
9786379556 / 944256 7043

## திண்டுகல்லில்

**மார்ச் 13, ஞாயிறு**
நேரம் மாலை 4 - 6
இடம் : C.S.I பாரீஸ் ஹால்
டட்லி பள்ளி அருகில்



செய்தியும், ஜெபமும்
**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு:
63823 92446 / 9442885315

## பெரம்பலூரில்

**மார்ச் 19, சனிக்கிழமை**
நேரம் மாலை 3 - 6
இடம் : கெத்சமனே ஜெப மையம்
வெங்கடேசபுரம், பாங்க் ஆப் பரோடா அருகில்



செய்தியும், ஜெபமும்
**சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு:
97888 12428 / 9788788512

## ஜெபமலையில்

**மார்ச் 20, ஞாயிறு**
நேரம் மாலை 2 - 5
இடம் : கீழமாதாபுரம், ஜெபமலை



செய்தியும், ஜெபமும்
**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு:
8270135305 / 9750955548